விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 190 வள்ளுவர் ஆண்டு 2057 ஆனி 13 சனிக்கிழமை (27.06.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

உப தவிசாளர் கிஷோரின் பதவி பறிப்பு

## ஆளுநரின் செயலைக் கண்டித்து

### சாவகச்சேரியில் கடையடைப்பும் கவனயீர்ப்பும்




(சாவகச்சேரி)

சாவகச்சேரி உப தவிசாளர் கிஷோரின் பதவி ஆளுநரால் பறிக்கப்பட்டதைக் கண்டித்து சாவகச்சேரியில் கடையடைப்பும் கவனயீர்ப்பும் மேற்கொள்ளப்பட்டது.

06ஆம் பக்கம் பார்க்க

## இழைக்கப்பட்ட அநீதிக்காக நீதிமன்றம் செல்வேன்

### சாவகச்சேரி நகர சபை உப தவிசாளர்

(சாவகச்சேரி)



என் மீதான குற்றச்சாட்டுப் பத்திரத்தை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் என்னிடம் வழங்கவில்லை. எனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்காக நீதிமன்றம் செல்லவுள்ளேன் என சாவகச்சேரி நகர சபை உப தவிசாளர் ஞா.கிஷோர் தெரிவித்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## எரிபொருள் விலையில் விரைவில் நிவாரணம்

### பிரதி அமைச்சர் அனில் ஜயந்த

(கொழும்பு)

உலக சந்தையில் எரிபொருள் விலைகள் குறைந்துள்ளதைக் கருத்தில் கொண்டு, எதிர்காலத்தில் பொதுமக்களுக்கு எரிபொருள் நிலையில் நிவாரணம்

16ஆம் பக்கம் பார்க்க

# போதைப்பொருளுக்கு நாட்டில் இடமில்லை

### அமைச்சர் ஆனந்த விஜேபால



(கொழும்பு)

போதைப்பொருளுக்கு நாட்டில் இடமில்லை. முந்தைய அரசாங்கங்களைப் போல தற்போதைய அரசாங்கம் முன்னெடுக்கும் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகள் வெறும் நாடகமல்ல என பொதுப்பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## 232 சந்தேகநபர்களுக்கு சிவப்பு அறிவித்தல்

(கொழும்பு)

வெளிநாடுகளில் பதுங்கியிருக்கும் 232 சந்தேகநபர்களுக்கு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

15ஆம் பக்கம் பார்க்க

## வலி.வடக்கில் காணிகளை விடுவிக்கக் கோரி போராட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்குப் பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள தமது காணிகளை விடுவிக்கக்கோரி காணி உரிமை

04ஆம் பக்கம் பார்க்க



துணுக்காய் கல்விளானில்

## மீன்பிடிக்கச் சென்ற இளைஞன் நீரில் மூழ்கி உயிரிழப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு துணுக்காய் கல்விளானில் மீன் பிடிக்கச்சென்ற இளைஞன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் அதேபகுதியைச் சேர்ந்த கண்ணையா அன்பரசன் (வயது-26) என்ற

15ஆம் பக்கம் பார்க்க

அநுர அரசுக்கு எதிராக

## கருத்துத் தெரிவிப்பவர்கள் இலக்கு வைக்கப்படுகின்றனர்

### நாமல் எம்.பி குற்றச்சாட்டு



(கொழும்பு)

அநுர அரசாங்கத்துக்கு எதிராக கருத்துத் தெரிவிப்பவர்கள் இலக்கு வைக்கப்படுகின்றனர் எனப் பாராளு

15ஆம் பக்கம் பார்க்க

## வெனிசுலா நிலநடுக்கம்

### உயிரிழப்பு 589 ஆக உயர்வு



15ஆம் பக்கம் பார்க்க

## சுகாதார அமைச்சர் இன்று யாழ்.விஜயம்

(யாழப்பாணம்)

சுகாதார மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சரும், அமைச்சரவை ஊடகப் பேச்சாளருமான மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ இன்று சனிக்கிழமை காலை யாழ்ப்பாணத்திற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் அமைச்சர், அண்மையில் தீ விபத்துக்

04ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது நடக்கும் உங்கள் நாளிதழ்
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணில் 29.12.1958

விண்ணில் 29.05.2026

## அமரர் இரத்தினவடிவேல் சிவனருள்சோதி

**(வல்வை சக்தி எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 28.06.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணியளவில் காந்தி வீதி, நெடியகாடு, வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று ஊரணி புனித தீர்த்தக்கரையில் அஸ்தி கரைக்கப்பட்டு, வீட்டு கிருத்தியக் கிரியைகள் அதே தினம் பி.ப 12.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நாம் துயருற்றிருந்த வேளையில் நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் முகநூல், மின்னஞ்சல், பிரசுரம் மற்றும் மலர்வளையம், மலர்மாலை சாத்தியவர்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் இன்று வரை எமக்கு சகல உதவிகளையும் வழங்கிய அன்பு நெஞ்சங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

(C-5929)

காந்தி வீதி, நெடியகாடு,
வல்வெட்டித்துறை.

தகவல் :
குடும்பத்தினர்



# தீவக வலய கல்விப் பணிப்பாளராக லெனின் அறிவழகன்


(யாழ்ப்பாணம்)

தீவக கல்வி வலயத்தின் பணிப்பாளராக இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் ஒன்றைச் சேர்ந்த துரைராஜசிங்கம் லெனின் அறிவழகன் அவர்கள் கடந்த 24 ஆம் திகதி நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக இவர் வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றியிருந்தார்.

இதேவேளை தீவக கல்வி வலயத்தின் பணிப்பாளராக இருந்த தி.ஞானசுந்தரன் வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் திட்டப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (ந-7)

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 18.09.1948

மறைவு 26.06.2026

எமது பிரதேச செயலக சமுர்த்தி மகா சங்கத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **திரு. திருநாமம் ரஞ்சித்** அவர்களின் பாசமிகு தந்தையார்

## அமரர் கிருஸ்ணபிள்ளை திருநாமம்

அவர்கள் 26.06.2026 அன்று காலமாகி விட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரிவுத்துயருடன்... பிரதேச செயலாளரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்,
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், பருத்தித்துறை.**

(C-5930)

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் பபா



தோற்றம் 06.08.1962

மறைவு 25.06.2026



புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பபா அவர்கள் கடந்த (25.06.2026) வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனியர் - கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான மருதப்பு - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும் பிரதீபன்(லாவோஸ்), பார்த்தீபன் (கனடா), கஜதீபன்(S.K.P றான்ஸ்போர்ட் அன் கஜன் சவுண்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சின்னம்மா, றாஜேஸ்வரி, ராசன்(S.R.S) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (28.06.2026) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மு.ப 11.00 மணியளவில் பிள்ளையான்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

காளிகாவத்தை வீதி,
புன்னாலைக்கட்டுவன் வடக்கு, புன்னாலைக்கட்டுவன்.

(7926)

தகவல்: குடும்பத்தினர்
077 082 6313

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாயமான 2.5 மில்லியன் டொலர் நிதி இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது

(கொழும்பு)

அவுஸ்திரேலிய நிறுவனத்துக்கு திறைசேரியால் செலுத்தப்பட்ட 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் மூன்றாம் தரப்பினால் மோசடி செய்யப்பட்டமை தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பான கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவரும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினருமான ஹர்ஷ டி சில்வா தலைமையில் அண்மையில் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

கடந்த மாதம் 8ஆம் திகதி நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் அரசாங்க நிதி பற்றிய குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை இலங்கை மத்திய வங்கியினால் ஆராய்ந்து பார்க்கப்பட்ட பின்னர், அவர்களின் கருத்துக்களை உள்ளடக்கியதாகத் தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கை குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. இலங்கை மத்திய வங்கியினால் சமர்ப்பிக்கப்பட்ட இந்த அறிக்கை தொடர்பாக குழுவில் நீண்டநேரம் கலந்துரையாடப்பட்டது.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆகியவற்றினால் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு அறிக்கைகளையும் ஆராய்ந்து குழுவின் இறுதி அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க இருப்பதாக அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர், அன்றையதினம் தெரிவித்திருந்த நிலையில் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் நிதி,திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஹர்ஷன சூரியப்பெரும, டிஜிற்றல் பொருளாதார அமைச்சின் செயலாளர் ஸ்ரீ தனபால, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மற்றும் இலங்கை கணினி அவசர தயார்நிலை அணியின் அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர். (நி)

# நேருக்கு நேர் மோதிய இரண்டு பேருந்துகள்

## 40 பேர் வரை காயம்



(மாத்தறை)

மாத்தறை - தலல்ல வீதியில் உள்ள வஜிர வம்ச மாவத்தையில் இரண்டு தனியார் பேருந்துகள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் குறைந்தது 40 பயணிகள் காயமடைந்து சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காலியிலிருந்து அம்பாறைக்குச் சென்றுகொண்டிருந்த பேருந்து ஒன்றும், தங்கல்லையிலிருந்து மாத்தறைக்குச் சென்றுகொண்டிருந்த மற்றொரு பேருந்தும் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த பயணிகள் மாத்தறை மற்றும் பத்தேகம வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (நி)

# தொல்.திருமாவளவனை சந்தித்தார் சிறீதரன் எம்.பி



(சென்னை)

இந்திய பாராளுமன்ற மக்களவை உறுப்பினரும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவருமான தொல். திருமாவளவனை, பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேரில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின்போது, ஈழத் தமிழர்களின் இன விடுதலைக்கான பயணத்தில் தொல். திருமாவளவன் கடந்த காலங்களிலும் தற்போதைய காலகட்டத்திலும் ஆற்றிவரும் பங்களிப்புகளுக்குச் சிவஞானம் சிறீதரன் தனது நன்றிகளைத் தெரிவித்தார்.

மேலும் ஈழத் தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வை நோக்கிய பயணத்தில், தமிழ்நாடு அரசும் மக்களும் வழங்கக்கூடிய அரசியல் மற்றும் மனிதாபிமான ஆதரவுகளை வலுப்படுத்துவது தொடர்பாகவும், அழுத்தங்களை முன்னெடுப்பது குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. (நி)

# சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கு வாட்ஸ்அப் எண் அறிமுகம்

(கொழும்பு)

சுற்றுச்சூழல் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகச் சுற்றாடல் அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ள புதிய வாட்ஸ்அப் சேவை, நேற்று முதல் செயற்பாட்டுக்கு வந்துள்ளது.

அதன்படி, பொதுமக்கள் சுற்றுச்சூழல் தொடர்பான பிரச்சினைகளை 0702509509 என்ற தொலைபேசி எண் வாயிலாக நேரடியாகத் தெரிவிக்கலாம்.

இந்தத் தகவல் பரிமாற்றச் செயற்பாட்டில், உண்மைகள் மற்றும் சான்றுகளைக் கொண்ட ஆவணங்கள், புகைப்படங்கள் மற்றும் அதிகாரப்பூர்வ அறிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்க முடிவு செய்துள்ளதாகச் சுற்றாடல் அமைச்சு அறிவித்துள்ளது.

இச்செயல்முறையின் மூலம் சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கு மிகவும் துல்லியமான, அறிவியல் பூர்வமான மற்றும் விரைவான தீர்வுகளைப் பெற முடியும் என்று அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

மேலும், கள அளவில் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகளை உடனடியாகத் தெரிவிக்கவும், சுற்றுச்சூழலுக்கு உகந்த புதிய யோசனைகள் மற்றும் கருத்துக்களை அதிகாரிகளுக்கு நேரடியாக அனுப்பவும் இது வாய்ப்பளிக்கும் என்றும் அமைச்சு குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# டெங்கு அதிகரிப்பு தொடர்பில் கூடுதல் கவனம் தேவை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

நாட்டில் 49000 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதால் அரசாங்கம் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா, நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை குறித்து கவலை வெளியிட்டார். (நி)

# உயர் நீதிமன்ற நீதியரசர் வெற்றிடங்களை நிரப்ப வலியுறுத்தி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கையொப்பங்கள் சேகரிப்பு



(கொழும்பு)

உயர் நீதிமன்றத்தில் நீண்டகாலமாக நிலவும் நீதியரசர் வெற்றிடங்கள் காரணமாக சட்டத்தின் ஆட்சிக்கும், மக்களின் அடிப்படை உரிமைகளுக்கும் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து விவாதிப்பதற்காக, பாராளுமன்ற நிலையியற் கட்டளை 83(1) இன் கீழ் விவாதமொன்றை நடத்துமாறு சபாநாயகரிடம் கோரிக்கை விடுக்க எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதற்காக, குறித்த விவாதத்தை கோரும் பிரேரணைக் கடிதத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்களைச் சேகரிக்கும் நடவடிக்கையை எதிர்க்கட்சியினர் நேற்று பாராளுமன்ற வளாகத்தில் முன்னெடுத்தனர்.

உயர் நீதிமன்றத்தில் எட்டுக்கும் மேற்பட்ட நீதியரசர் வெற்றிடங்கள் ஆறு மாதங்களுக்கு மேலாக நிரப்பப்படாமல் இருப்பது, நீதித்துறைச் செயற்பாடுகளைப் பாதிப்பதாக எதிர்க்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

நீதியரசர் வெற்றிடங்கள் நீடிப்பதன் விளைவாக, சட்டத்தின் ஆட்சி மற்றும் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதில் ஏற்பட்டுள்ள சவால்கள் குறித்து இந்த விவாதத்தில் கவனம் செலுத்தப்படவுள்ளது.

மக்கள் நீதியைப் பெறுவதற்கான அணுகல் உரிமையில் ஏற்பட்டுள்ள தடைகள் மற்றும் தாமதங்கள் குறித்து பாராளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருதல்.

நீதித்துறையின் சுதந்திரம் மற்றும் வினைத்திறனை உறுதிப்படுத்துவதில் அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலை வலியுறுத்துதலை நோக்காக கொண்டே இந்த விவாதத்தை கோரியுள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் யாழ்.மத்திக்கு 2 தங்கப்பதக்கங்கள்

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகள் யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் 18 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான குண்டு போடுதல் போட்டியில் யாழ்.மத்திய கல்லூரியைச் சேர்ந்த வை. தினோஜன் 12.91 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கத்தையும் கிளிநொச்சி பளை மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஏ. பிரசன்னா 12.19 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும் யாழ்.மத்திய கல்லூரியைச் சேர்ந்த யூ. திருட்சிகன் 11.92 மீற்றர் தூரம் எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர்.





அத்துடன் 18 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான முப்பாய்ச்சல் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த என். தனுஷன் 13.26 மீற்றர் தூரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும் மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ரி.தரனிஷ் 12.98 மீற்றர் தூரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் மன்னார் சென்.பற்றிமா ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையைச் சேர்ந்த பி.தனுஷ் 12.70 மீற்றர் தூரம் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர். (3-90)

## சுகாதார...

குள்ளான யாழ். போதனா வைத்தியசாலைக்கு நேரில் சென்று அதன் தற்போதைய செயற்பாடுகள் மற்றும் குறைபாடுகள் குறித்து உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளார்.

அத்துடன் தீவகத்துக்கு விஜயம் செய்யவுள்ள அமைச்சர் தீவகத்தின் தற்போதைய சுகாதாரக் கட்டமைப்பு வசதிகள், வைத்தியசாலைகளின் தேவைகள் குறித்து நேரில் ஆராயவுள்ளார்.

அண்மையில் யாழ். போதனா வைத்தியசாலையில் நீண்டகாலமாகப் பணியாற்றி வரும் தற்காலிக மற்றும் தொண்டர் ஊழியர்கள் நிரந்தர நியமனம் தொடர்பான தமது கோரிக்கைகளை முன்வைத்திருந்த நிலையில் சுகாதார அமைச்சரின் இவ் வருகையின் போது குறித்த விவகாரத்தில் ஆக்கபூர்வமான முடிவுகள் எட்டப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறன.(ம-7)

## வலி.வடக்கில்...

யாளர்கள் இராணுவத்தினரின் "கொமாண்டோ" பங்களா முன்பாக நேற்றுப் பத்தாவது வெள்ளிக்கிழமை போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

வலி. வடக்கில் 249, 256, 248, 251 மற்றும் 255 ஆகிய கிராம சேவையாளர் பிரிவை சேர்ந்த மக்கள் கடந்த 1990 ஆம் ஆண்டு ஜூன் மாத காலப்பகுதியில் அவர்களது சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர், அப்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாகக் காணப்படுகிறது.

யுத்தம் முடிவடைந்து 17. வருடங்கள் கடந்த நிலையிலும் அப்பகுதிகளிலிருந்து பாதுகாப்புத் தரப்பினர் வெளியேறாத நிலையில் அவை உயர் பாதுகாப்பு வலயமாகவே காணப்படுகிறது.

இந்நிலையில் தமது 651 ஏக்கர் வரையிலான காணிகளை விடுவிக்குமாறு பல வருடங்களாக காணி உரிமையாளர்கள் போராடி வரும் நிலையில் காணிகளை விடுவிக்குமாறு ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் போராட்டங்களை முன்னெடுப்பதாக காணி உரிமையாளர்கள் முடிவெடுத்திருந்த நிலையில் நேற்று போராட்டத்தினை முன்னெடுத்தனர். (ம-7,33)


## மரண அறிவித்தல்

பிறப்பு 03 - 08 - 1952



இறப்பு 25 - 06 - 2026

### திருமதி வசந்தமலர் பரராசசிங்கம்

பச்சந்தைத் தெரு, பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வசந்தமலர் பரராசசிங்கம் அவர்கள் கடந்த (25.06.2026) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - தங்கப்பொண்ணு தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கதிரேசு - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் பரராசசிங்கம் (ஓய்வு பெற்ற அஞ்சல் அதிபர்) அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற மனோகரன் (அஞ்சல் அதிபர்) மற்றும் துஷ்யந்தி (லண்டன்), மயூரதன் (ஜேர்மனி),செந்தூரன் (கனடா), நிரூபன் (பொறியியலாளர் - சிங்கப்பூர்), சுகந்தி (ஆசிரியர் - யா/கரணவாய் தாமோதர வித்தியாலயம்), அனுதர்சன் (அஞ்சல் உத்தியோகத்தர் - வல்வெட்டித்துறை), சஞ்சிகா ஆகியோரின் பாசமிகு அன்னையும் கலைவாணி, பார்த்தீபன் (லண்டன்), சாந்தினி (ஜேர்மனி), கௌதமி (சிங்கப்பூர்), பிருந்தாவன் (அஞ்சல் அதிபர் - சுன்னாகம்), ரம்யா (ஆசிரியர் - யா/ செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை), பிரமிலன் (புலன் விசாரணை அதிகாரி - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமியும் யதுர்சன், கௌசிகன், அக்சயா, அம்சயா, அபிசயா, அஜீஸ், அனிஷா, சக்திஸ்ரீ, மதுஸ்ரீ, சாத்மீகா, கவினாஷ், ஹரிஷ்மிதா, ஹரிஷ்மித்ரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.06.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஊறணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பச்சந்தைத் தெரு,
பொலிகண்டி.

077 923 4162
076 141 8174

தகவல் :
குடும்பத்தினர்

(C-5932)


## ஆண்களுக்கான ஈட்டி எறிதல்

# கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன் புதிய சாதனை




வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான மெய்வல்லுனர் போட்டிகள் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் 18 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த பி.சஞ்சயன் 61.07 மீற்றர் தூரம் எறிந்து புதிய சாதனையைப் பதிவு செய்து வர்ணச் சான்றிதழுடன் தங்கப் பதக்கத்தையும் பளை மத்திய கல்லூரியைச் சேர்ந்த வி.தேவரா்ம் வர்ணச் சான்றிதழுடன் வெள்ளிப் பதக்கத்தையும் இடைக்காடு மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.தருண் வர்ணச் சான்றிதழுடன் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர். (3-90)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## ஞானசார தேரருக்கு எதிரான
# வழக்கு ஒத்திவைப்பு



(கொழும்பு)

கொழும்பு மேல் நீதிமன்றம் பொது பல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரருக்கு எதிராக சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை, எதிர்வரும் ஜூலை 31ஆம் திகதி மீண்டும் அழைக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கின் தலைமை நீதிபதியான கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி புத்திக சி. ராகல நேற்று வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ விடுமுறையில் இருந்தமையினால், கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி உதேஷ் ரணதுங்க முன்னிலையில் இந்த விவகாரம் எடுத்துக் கொள்ளப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இஸ்லாமிய மதத்திற்கு தீங்கு விளைவிக்கும் வகையிலான கருத்துக்களை வெளியிட்டமை மற்றும் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் செயற்பட்டமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ், சட்டமா அதிபரினால் ஞானசார தேரருக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பொலிஸ் உயர் அதிகாரியின் மகன் செய்த செயல்

## போக்குவரத்து பொலிசாரின் துணிச்சல்

(கொழும்பு)

பொரளை கண் மருத்துவமனைக்கு அருகில், பூக்கடைகள் அமைந்துள்ள பகுதியில் நேற்று முன்தினம் காலை நடந்த ஒரு சம்பவம் குறித்து சமூக ஊடகங்களில் பெரும் பேசுபொருளாகியுள்ளது.

வாகனம் நிறுத்தத் தடை என்று வீதி அபிவிருத்தி ஆணையத்தால் தெளிவாக வைக்கப்பட்டிருந்த அறிவிப்புப் பலகைகளையும் மீறி, வீதியோரத்தில் ஒரு சொகுசு கார் நிறுத்தப்பட்டிருந்ததே இந்தச் சம்பவத்திற்குக் காரணமாக அமைந்துள்ளது.

அங்குள்ள பொலிஸ் நிலையத்தில் பணியில் இருந்த ஒரு போக்குவரத்து அதிகாரி, ஓட்டுநரை அணுகி வாகனத்தை அகற்றுமாறு கோரியுள்ளார்.

இதன்போது, அந்த வாகனத்தில் இருந்த இளைஞர், தான் ஒரு மூத்த பொலிஸ் அதிகாரியான, பிரதி பொலிஸ் மா அதிபர் (டி.ஐ.ஜி) மகன் என்று கூறி சட்ட நடவடிக்கையிலிருந்து தப்பிக்க முயன்றுள்ளார்.

இருப்பினும், அந்தப் போக்குவரத்து அதிகாரி, அந்தப் பதவிகள் தனக்கு முக்கியமில்லை என்றும், உங்களது தந்தை எனக்கு சம்பளம் கொடுப்பதில்லை, அரசாங்கமே சம்பளம் கொடுக்கிறது என்று மிகவும் நேரடியாகக் கூறி தனது கடமையைச் செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சமூக ஊடகங்களில் வெளியானதைத் தொடர்ந்து, சட்டத்தைக் கடுமையாகப் பின்பற்றிய குறித்த பொலிஸ் அதிகாரியின் நேரடியான மற்றும் நேர்மையான கொள்கையைப் பலரும் பாராட்டியுள்ளனர்.

இலங்கையின் பாரம்பரிய நிர்வாகக் கலாசாரத்தில், இதுபோன்ற நேர்மையான அதிகாரிகள் பல்வேறு அழுத்தங்களுக்கு உள்ளாக்கப்பட்டு, தொலைதூரப் பகுதிகளுக்கு இடமாற்றம் செய்யப்படும் அபாயம் இருந்தாலும், தற்போதைய சட்டப் பின்னணியிலும் நாட்டில் நிலவும் சூழ்நிலையிலும் இது போன்ற அநீதிகள் நிகழாது என்று பொதுமக்கள் வலுவாக நம்புகிறார்கள். (நி)

# சரித் அபேசிங்கவை கட்சியிலிருந்து நீக்கிய ஐக்கிய மக்கள் சக்தி

(கொழும்பு)

ஹொரணை தொகுதி அமைப்பாளர் சரித் அபேசிங்கவின் கட்சி உறுப்பினர் மற்றும் அவர் வகித்த அனைத்துப் பதவிகளையும் ஐக்கிய மக்கள் சக்தி உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்தியுள்ளது.

2023 ஆம் ஆண்டில் நடந்ததாகக் கூறப்படும் இலஞ்ச ஊழல் விவகாரம் தொடர்பாக நேற்று முன்தினம் அபேசிங்கே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்த முடிவு எடுக்கப்பட்டதாக கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில் குற்றச்சாட்டுக்குரிய இந்த சம்பவம் நிகழ்ந்தபோது, அபேசிங்க தமது கட்சியின் உறுப்பினரா கவோ அல்லது அமைப்பாள ராகவோ இருக்கவில்லை என்றும் ஐக்கிய மக்கள் சக்தி அந்த அறிக்கையில் தெளிவுபடுத்தியுள்ளது.



மேலும், ஊழல் அல்லது பிற சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராகச் சட்டத்தை அமுல்படுத்துவதை ஆதரிக்கத் தயங்கமாட்டோம் என்றும், அத்தகைய நபர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதை எதிர்க்கவில்லை என்றும் ஐக்கிய மக்கள் சக்தி அந்த அறிக்கையில் மீண்டும் வலியுறுத்தியுள்ளது. (நி)


# INVITATION FOR BIDS 2026/04
# Puthukkudiyiruppu Pradeshiya Sabha

1. The **Chairman, Divisional Procurement Committee** on behalf of the **Chairman, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu** invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding.**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field and grade mentioned in the table below. **"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 for the contracts exceed Rs.5 million," Relevant document should be submitted.**
4. Qualification' requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.

| | | Document Issuing/Purchasing Period | | | | From 27/06/2026 until 13/07/2026 | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Pre-Bid Conference | | | | At 10.30 A.M on 06/07/2026 | | | | | |
| | | Closing and Opening of Bids | | | | At 10.30 A.M on 14/07/2026 | | | | | |
| S/No | Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period upto | Required Bid Security | |
| | | | | | | | | | Amount (Rs.) | Validity Period |
| 01 | SD/NP/MU/PTKPS/2026/01 | Renovation of Valluvarpuram Market | Stamp Duty | 2.54 | 77 | C9 or above (Building) | 2,000.00 | 31/08/2026 | 40,000.00 | 28/09/2026 |

6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman,Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu (T.P:0212291024, email: pkips@gmail.com)** from 9:00 hrs to 15:00 hrs on any working days during the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) must be delivered to the **Chairman, Divisional Procurement Committee, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu** on or before **10.30 A.M** as stated in table above. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend at **Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu.**
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu** commencing at **10.30 A.M** as stated in table above.
9. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Tables.

**Chairman,**
**Divisional Procurement Committee,**
**Puthukkudiyiruppu Pradeshiya Sabha.**
**27.06.2026**

(C-5928)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள்- 2025

**யா/தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்**

**9ஏ**

பா.கபில்

**8ஏபி**

க.ளசுஜிந்தன்

## கரவெட்டியில் நடைபெற்ற போசாக்கு விழிப்புணர்வு நடைபவனி



(கரணவாய்)

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் 2026 ஆம் ஆண்டுக்கான போசாக்கு விழிப்புணர்வு நடைபவணியும் கண்காட்சியும் நேற்றைய தினம் நடைபெற்றது.

நெல்லியடிச் சந்தியில் ஆரம்பித்த குறித்த நடைபவனி கரவெட்டி பிரதேச சபையில் நிறைவடைந்தது.

அதனைத் தொடர்ந்து சிறுவர் நிகழ்வுகளும் கண்காட்சியும் இடம்பெற்றது.

நிகழ்வில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் தவிசாளர்கள், உறுப்பினர்கள்,சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (8-60)



தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் கடந்த புதன் கிழமை பாவலர் துரையப்பா பிள்ளை மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

## வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்துக்கு பதில் பிரதேச செயலாளர் நியமனம்!



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தின் பதில் பிரதேச செயலாளராக F.C. சத்திய சோதி கடந்த 23ஆம் திகதி உத்தியோகபூர்வமாக தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

இவர் இலங்கை நிர்வாக சேவையின் தரம் I உத்தி யோகத்தராவதுடன் தற்பொழுது சாவகச்சேரி பிரதேச செயலாளராகவும் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (8)

## உப தவிசாளரின் பதவி பறிப்பை கண்டித்து சாவகச்சேரியில் கவனயீர்ப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபை உப தவிசாளரின் பதவி பறிக்கப்பட்டு, உறுப்பினர் பதவியும் வறிதாக்கப்பட்ட சம்பவத்தை கண்டித்து சாவகச்சேரி வர்த்தகர்கள் கடையடைப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ள நிலையில், சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் நேற்றைய தினம் கவனயீர்ப்பு போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையை சபையில் விமர்சித்து, அதனை தூக்கி வீசிய குற்றத் தில், நகர சபை உப தவிசா ளர் ஞா. கிசோரை வடமா காண ஆளுநர், உப தவிசா ளரின் பதவியை நீக்கியும், நகர சபை உறுப்புரிமையை வறிதாக்கியும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டுள்ளார்.குறித்த சம்பவத்தை கண்டித்தும் நீதி கோரியும், சாவகச்சேரி வர்த்தகர்கள் நேற் றைய தினம் முழு கடைய டைப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ள நிலையில் சாவகச்சேரி பேருந்து நிலை யத்தில் கவனயீர்ப்பு போராட் டமும் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில் ,சாவகச்சேரி நகர சபை உறுப்பினர்கள் அரசியல் பிரமுகர்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (8-30)



### கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர்- திண்ணபுரம் ஸ்ரீ சௌந்தராம்பிகா சமேத ஸ்ரீ சுந்தரேஸ்வரப் பெருமான் ஆலய மகாகும்பாபிசேகம் எதிர்வரும் ஜூலை மாதம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கர்மாரம்பம் நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறும். எண்ணெய்க்காப்பு எதிர் வரும் ஜூலை மாதம் 2 ஆம் திகதி முதல் 4 ஆம் திகதி வரை நடைபெறும். (8-33)

### கருத்துரையும் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொது நூலகம் நடத்தும் நவீன கால பிள்ளை வளர்ப்பு "சவால்களை வாய்ப்புக ளாக மாற்றுவோம்" எனும் தொனிப்பொருளில் கருத்துரையும் கலந்துரையாடலும் எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப் பாணம் பொது நூலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் சமுதாய மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி திருமதி. திருமகள் சிவசங்கர் வளவாளராக கலந்து கொள்ளவுள்ளார். (8)

### மஹோற்சவம்

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு ஒட்டு சுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 14 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று வரும் நிலை யில் இன்றைய தினம் இரவு 9 மணிக்கு சப்பறத் திருவிழாவும் நாளைய தினம் தேர்த்திருவிழாவும் நாளை மறுதினம் தீர்த்த் திருவிழாவும் இடம் பெறும். (8-299)

## பருத்தித்துறையில் டெங்கு பரவும் சூழல் 17 பேருக்கு சிவப்பு அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையில் 123 இடங்களில் டெங்கு நுளம்பு பரவக் கூடிய சூழலாக இனங்காணப்பட்டதுடன் 17 பேருக்கு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டும் இருந்தது.


பருத்தித்துறை நகரசபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு ஒழிப்பு வேலைத்திடம்நேற்று முன் தினம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது 123 இடங்கள் டெங்கு நுளம்பு பரவக்கூடிய சூழலாக இனம் காணப்பட்டது.

அத்துடன் 17 பேருக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதுடன் குடியிருப்பாளர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டது.

பருத் தித்துறை நகர சபையினர், பிரதேச செயலகத்தினர், பொலிஸார், சுகாதார வைத்திய அதி காரிபணிமனையினர் மற்றும் இராணுவத்தினர் இந்தப் பணி யில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (8-60)

## வவுனியாவில் போதைப் பொருள் கடத்தல் - ஒருவர் கைது



(வவுனியா)

வவுனியா லக்சபானா வீதிக்கு அண்மையில் 21 கிலோ 600 கிராம் கேரள கஞ்சா போதைப் பொருளை கடத்திச்சென்ற ஒருவரை நேற்று முன்தினம் வியாழக் கிழமை (25) கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து கிளிநொச்சியில் இருந்து வவுனியா நோக்கி வந்த காரில் கொண்டு வரப்பட்ட கஞ்சாவினை மற்றொரு முச்சக்கரவண்டிக்கு மாற்ற முற்றப்பட்ட போது சந்தேக நபர் கைது செய்யப் பட்டுள்ளதுடன் மேலும் இருவர் தப்பிச் சென்றுள்ளதாகப் பொலிஸார்தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவரிடமிருந்து பொதி செய்து மறைத்து வைக்கப்பட்டிருந்த 21 கிலோ 600 கிராம் கேரள கஞ்சா வினை பொலிஸார் மீட்டுள்ளதுடன், வாகனத்தையும், முச்சக்கர வண்டியையும் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

மீட்கப்பட்ட கஞ்சாவின் பெறுமதி ஒரு கோடி ரூபாய் இருக்கலாம் என பொலிஸார் தெரிவித்ததுடன், கைது செய்யப்பட்டவர் தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (8-250)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

## சென். ஜோண்ஸ் கல்லூரி
## சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

**தரம் 12 (A/L 2028) இற்கான மாணவர் அனுமதி**

அ. விண்ணப்பப் படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 30.06.2026 முதல் 10.07.2026 வரை பெற்றுக் கொள்ளலாம்.

ஆ. விண்ணப்பப்படிவத்தினை அலுவலக நாட்களில் மு.ப 8.30 மணிமுதல் பி.ப 2.00 மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.

இ. எம்மால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் 10.07.2026.

- விஞ்ஞானம் (தமிழ் / ஆங்கில மொழிமூலம்)
- கணிதம் (தமிழ் /ஆங்கில மொழிமூலம்)
- வர்த்தகம் (தமிழ் / ஆங்கில மொழிமூலம்)
- கலை (தமிழ் மொழி மூலம்)
- தொழினுட்பவியல் (தமிழ் மொழிமூலம் - சென்.ஜோண்ஸ் கல்லூரியில் மட்டும்).

மேற்படி விடயங்கள் தொடர்பாக அந்தந்தக் கல்லூரி அலுவலகங்களுடன் நேரடியாக அல்லது தொலைபேசியூடாக அல்லது மின்னஞ்சல் மூலமாகத் தொடர்பு கொள்ள முடியும்.

சென்.ஜோண்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்
தொலைபேசி-0212222432
மின்னஞ்சல்- sjcjaffna@gmail.com

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்
தொலைபேசி-0212222338
மின்னஞ்சல்- forwardcgc@yahoo.com


✦ சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ள மாணவர்களிற்கு முன்னுரிமை அடிப்படையில் அந்தந்தப் பாடசாலைகளினால் புலமைப்பரிசில் வழங்கப்படும்.

(C-5927) அதிபர்கள்



# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
17 - 09 - 1944



ஆண்டவன் அடியில்
11 - 06 - 2022

## அமரர். கணபதிப்பிள்ளை முத்துக்குமாரு
(முன்னாள் யாழ் ப.நோ.கூ.ச கிளை முகாமையாளர்)

திதி–27.06.2026

எல்லோர் மீதும் அன்பாய் இருந்து
ஏற்ற உதவிகள் புரிந்து
வாழ்வில் ஒளியை ஏற்றினீர்கள்-அப்பா
எம்மை விட்டு நீங்கள்
எங்கே சென்றீர்கள் இப்போ
ஒளியிழந்து போனோம்-அப்பா
உம் கனவுகள் எல்லாம் நிஜமாய் ஆகிவிட்டது
காண்பதற்கோ நீங்கள் இல்லை- அப்பா
என்றும் உம் நினைவுடன் வாழ்கிறோம்
ஏணியாய் ஒளியேற்றிடுங்கள்-அப்பா

ஏழாலை கிழக்கு,
ஏழாலை
(7930)
மனைவி, பிள்ளைகள்
மருமகன்
பேரன்–தியான்,நியான்


## மாகாண மட்ட கோலூன்றிப் பாய்தல்
# சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவனுக்கு தங்கம்



(யாழ்ப்பாணம்)
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான கோலூன்றி பாய்தல் போட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ். கஜானன் தங்கப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான மெய்வல்லுனர் போட்டிகள் யாழ் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் 20 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான கோலூன்றி பாய்தல் போட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த எஸ். கஜானன் 4 .00 மீற்றர் உயரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியைச் சேர்ந்த ஏ. அறிவகன் 3.60 மீற்றர் உயரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் பளை மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஆர். பிரியந்தன் 3.20 மீற்றர் உயரம் பாய்ந்து வெண்கல பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர். (3-90)



வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் வதிரி முன் பள்ளி சிறார்களின் விளையாட்டு விழாவானது அண்மையில் பிரதெச சபையின் தவிசாளர் கு.சுரேந்திரன் தலைமையில் நடைபெற்றது.
(படம் : மகாலிங்கம்)


## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள்வாக்குப் பெற்ற இரத்தினசாமி சாஸ்திரியார் அவர்கள் யாழ்.வருகை, ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத் தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை, வெளிநாடு செல்லத்தடை, கல்வியில் தடை, குழந்தைப் பாக்கியம் மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் நேரில்.

074 196 4945, 076 682 7368 (C-5926)
இல.90, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

27.06.2026

அமரர்.துரையர் சந்தனம்
(ஓய்வு பெற்ற நீர்ப்பாசனத் திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர்(விசேட தரம்)
திதி:பூர்வபக்க திரயோதசி

அமரர்.சரஸ்வதி சந்தனம்
திதி:பூர்வபக்க அட்டமி



எம் வாழ்வின் வழிகாட்டியாய்
என்றும் எம்முடன் வாழும்
பாசமிகு தெய்வங்களே!
ஐந்து ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும் மறையாது
மனதில் என்றும் வாழ்ந்து
கொண்டிருக்கிறீர்கள்

தோற்றம் 18.04.1943
மறைவு 22.06.2021

தோற்றம் 11.04.1946
மறைவு 10.01.2022


"சந்தனம் சரஸ்வதி இல்லம்",
இல. 96, அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.
(7625)
நினைவோடு வணங்கி நிற்கும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## வெனிசுலா நிலநடுக்கம்

# பல உயிர்களைக் காத்த கூகுள் தொழில்நுட்பம்




(கராகஸ்)

வெனிசுலாவில் நிலநடுக்கம் ஏற்படுவதற்கு சில விநாடிகளுக்கு முன்பு தொலைபேசியில் உள்ள கூகுள் அண்ட்ரோய்ட் நிலநடுக்க எச்சரிக்கை தொழில்நுட்பம், ஆரம்ப கட்ட நில அதிர்வை கண்டறிந்து பயனர்களுக்கு எச்சரிக்கைகளை அனுப்பியுள்ளது.

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான வெனிசுலாவில் ரிச்டர் 7.2 அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து ஒரு சில நிமிடங்களில் 2ஆவது நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவுகோலில் 7.5 ஆக பதிவானது. இந்த 2 நிலநடுக்கங்களும் வெனிசுலாவில் கடந்த 100 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு மிக பயங்கரமான நிலநடுக்கங்கள் என அமெரிக்க புவியியல் ஆய்வு நிலையம் தெரிவித்துள் ளது.

இதற்கிடையில், நில் நடுக்கம் ஏற்படுவதற்கு முன்பே வெனிசுலாவில் இலட்சக் கணக்கான மக்க ளுக்கு அவர்களது தொலைபேசிகளில் நிலநடுக்கம் குறித்த எச்சரிக்கை வந்துள்ளது. நிலநடுக்கம் ஏற்படுவதற்கு ஒரு சில வினாடிகளுக்கு முன்பு இந்த எச்சரிக்கை வந்துள்ளது.

இருப்பினும் அந்த சிறிய கால அவகாசத்தில் பலர் உஷாராகி பாதுகாப்பான இடங்களுக்கு சென்றுள்ளனர். கூகுள் நிறுவனத்தின் இந்த தொழில்நுட்பம் பல உயிர்களை காப்பாற்றியுள்ளது.

அண்ட்ரோய்ட் செல் போன்களில் கூகுள் நிறுவனத்தின் 'நிலநடுக்க எச்சரிக்கை அமைப்பு' என்ற தொழில்நுட்பம் உள் ளது. இது ஆரம்பகட்ட நில அதிர்வுகளை கண்டறிந்து எச்சரிக்கைகளை அனுப்புகிறது.


இது போன்ற தொழில்நுட்பங்கள் மேலும் வளர்ச்சி அடையும் பட்சத்தில் எதிர்காலத்தில் இயற்கை பேரிடர்களின்போது மனித உயிர்களை காப்பது எளிதாகலாம் என தொழில்நுட்ப வல்லுநர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். (3)

# பாடசாலைகள் மீது தாக்குதல் நடத்துபவர்கள் கட்டாயம் தண்டிக்கப்பட வேண்டும்

## ஐ.நா.வில் இந்தியா தெரிவிப்பு

(டில்லி)

உலகம் முழுவதிலும் மோதல் நடக்கும் பகுதிகளில் பாடசாலைகளுக்கும் குழந்தைகளுக்கும் எதிராக அட்டூழியங்களை செய்பவர்கள் மீது எந்தவித கருணையும் காட்டக் கூடாது என்றும், அவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட்டு கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும் என்றும் ஐ.நா.வில் இந்தியா வலியுறுத்தியுள்ளது.



ஐ.நா பாதுகாப்புக் கவுன்சில் கூட்டத்தில் பேசிய இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி ஹரிஷ் பர்வதனேனி, "போர் மற்றும் மோதல் காலங்களிலும் குழந்தைகள் கல்வி பெறுவது அவர்களின் அடிப்படை உரிமையாவே தொடர்கிறது.

இருப்பினும் பாடசாலைகளில் குண்டு வீசி, குழந்தைகளின் உயிருக்கு ஆபத்தை விளைவிப்பவர்கள் தண்டனையின்றி தப்பித்துக்கொள்வது துரதிர்ஷ்ட வசமானது.

உலகம் முழுவதும் குழந்தைகளின் அவலநிலை குறித்த சமீபத்திய ஐ.நா அறிக்கைகள் அதிர்ச்சியளிக்கின்றன.

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், போர் மண்டலங்களில் குழந்தைகளுக்கு எதிரான வன்முறை கவலைக்கிடமான விகிதத்தில் அதிகரித்துள்ளது.

ஒரே ஆண்டில், பாடசாலைகள் மீதான தாக்குதல்கள் 44 சதவீதம் அதிகரித்துள்ளன. இன்று உலகெங்கிலும் 47 கோடிக்கும் அதிகமான குழந்தைகள் போரின் நிழலில் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களில் 8.5 கோடிக்கும் அதிகமான குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விக்கான அணுகல் கூட இல்லை என்பது, மனிதகுலத்தின் ஒட்டுமொத்த தோல்வியையே சுட்டிக்காட்டுகிறது எனத்தெரிவித்துள்ளார். (3)

## ஹார்முஸ் நீ

# சிங்கப்பூ

# தாக்குதல்

(மஸ்கட்)

**ஹார்முஸ் நீரிணையில் சிங்கப்பூர் கப்பல் மீது ஈரான் தாக்குதல் நடத்திய சம்பவம் உலக நாடுகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.**

நான்கு மாதங்களாக நீடித்து வந்த அமெரிக்கா - ஈரான் இடையேயான போரை நிறுத்துவது தொடர்பான ஒப்பந்தம் அண்மையில் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தத்தில் வளைகுடா பிராந்தியத்தில் இருந்து அமெரிக்க படைகளை விலக்குவது, 60 நாட்களுக்கு ஹார்முஸ் நீரிணையில் எந்தவொரு கட்டணமும் இல்லாமல், பாதுகாப்பான கப்பல் போக்குவரத்தை உறுதி செய்வது போன்ற அம்சங்கள் இடம்பெற்றிருந்தன.

நேற்று முன்தினம் இந்திய கப்பல்கள் உட்பட கச்சா எண்ணெய் சரக்குகளை 70இற்கும்

# 'ட்ரில்லியனர்' அந் இழந்தார் எலா

(வோஷிங்டன்)

உலகின் முதல் 'ட்ரில்லியனர்' என்ற வரலாற்றுச் சாதனையைப் படைத்த இரண்டே வாரங்களுக்குள், தொழிலதிபர் எலான் மஸ்க் அந்த அந்தஸ்தை இழந்துள்ளார்.

அவரது ஸ்பேஸ்எக்ஸ் மற்றும் டெஸ்லா நிறுவனங்களின் பங்குகள் சந்தையில் பாரிய வீழ்ச்சியைக் சந்தித்ததைத் தொடர்ந்தே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

ப்ளூம்பெர்க் பில்லியனர்கள் குறியீட்டின் படி, எலான் மஸ்கின் சொத்து மதிப்பு சுமார் 350 பில்லியன் அமெரிக்க டொலர்களால் சரிவடைந்துள்ளது.

இதன் காரணமாக, இந்த மாத தொடக்கத்தில் 1.3 ட்ரில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமாகக் காணப்பட்ட அவரது நிகர சொத்து மதிப்பு, தற்போது சுமார் 957 பில்லியன் அமெரிக்க டொலர்களாகக் குறைந்துள்ளது.


இந்த மாத தொடக்கத்தில் உலகமே பெரிதும் எதிர்பார்த்த ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் பொதுப் பங்கு வெளியீட்டைத் தொர்டர்ந்து, அந்த நிறுவனத்தின் சந்தை மதிப்பும் எலான் மஸ்கின் தனிப்பட்ட சொத்து மதிப்பும் வெகுவாக அதிகரித்தன.

இதன் மூலமே அவர் 1 ட்ரில்லியன் அமெரிக்க டொலர் என்ற மைல்கல்லைக் கடந்து சாதனை படைத்திருந்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நீரிணையில் பதற்றம்

# ர் கப்பல் மீது
# நடத்திய ஈரான்




மேற்பட்ட கப்பல்கள் ஹார்முஸ் நீரிணையை பாதுகாப்பாக கடந்து சென்றன.

இந்த நிலையில், ஓமனின் தஹித் கடற்கரை அருகே சிங்கப்பூர் கொடியுடன் சென்ற சரக்கு கப்பல் மீது ஈரான் ட்ரோன் தாக்குதலை நடத்தியுள்ளது. இதில், கப்பலின் கட்டுப்பாட்டு அறை சேதமடைந்துள்ளதாக பிரிட்டனின் கடல்சார் வர்த்தக செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது. இந்தத் தாக்குதலில் எவருக்கும் காயமோ அல்லது சுற்றுச் சூழலுக்குப் பாதிப்போ ஏற்படவில்லை என்று கூறி யுள்ளது.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து, பெர்சிய வளைகுடாவில் முடங்கியுள்ள பல கப்பல்களை வெளியேற்றுவதற்காக சில நாட்களுக்கு முன்பு ஐ.நா.வின் சர்வதேச கடல்சார் அமைப்பு கொண்டு வந்த திட்டத்தை தற்காலிகமாக நிறுத்திவைப்பதாக அறிவித்துள்ளது. (3)

## கொங்கோவில் தீவிரமடைந்த எபோலா; 300ஐக் கடந்த உயிரிழப்புக்கள்




(கொங்கோ)

கொங்கோ ஜனநாயகக் குடியரசில் எபோலா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,155 ஆக அதிகரித்துள்ளதுடன், இதுவரை 304 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு அரசாங்கம் வியாழக்கிழமை வெளியிட்டுள்ள உத்தியோகபூர்வ தரவுகள் தெரிவிக்கின்றன.

புதன்கிழமை வரையிலான உத்தியோகபூர்வ தரவுகளின்படி, கடந்த 24 மணித்தியாலங்களில் மட்டும் புதிதாக 37 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், மேலும் 5 மரணங்கள் பதிவாகியுள்ளதாக இந்த நிலவர அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

தீவிரப்படுத்தப்பட்டுள்ள நோய்த்தொற்றியல் மற்றும் உயிரியல் கண்காணிப்பு நடவடிக்கைகள் காரணமாக, நோய்த்தொற்றுகளை ஆரம்பக் கட்டத்திலேயே கண்டறிய முடிந்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும், வாராந்த அடிப்படையில் சமூகங்களுக்கு இடையிலான எபோலா வைரஸ் பரவல் தொடர்ந்து அதிகரித்து வருவதை இத்தரவுகள் உறுதிப்படுத்துவதாக அதிகாரிகள் மேலும் எச்சரித்துள்ளனர். (3)

# ந்தஸ்தை
# ன் மஸ்க்

எனினும், அதன் பின்னர் ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் பங்குகள் அவற்றின் உச்ச வரம்பிலிருந்து 30 சதவீதத்துக்கும் மேலாக வீழ்ச்சியடைந்துள்ளன. அத்துடன் டெஸ்லா நிறுவனத்தின் பங்குகளும் சரிவைச் சந்தித்ததால், எலான் மஸ்கின் பெருமளவிலான சொத்துக்கள் கரையத் தொடங்கின.

இந்தத் திடீர் சொத்து வீழ்ச்சிக்கு மத்தியிலும், எலான் மஸ்க் உலகின் பெரும் பணக்காரர்கள் வரிசையில் இன்னமும் முதலிடத்திலேயே நீடிக்கின்றார்.

அவரது சொத்துக்களில் பெரும்பகுதி ஸ்பேஸ்எக்ஸ் மற்றும் டெஸ்லா நிறுவனங்களின் பங்குகளிலேயே முதலீடு செய்யப்பட்டுள்ளது. (3)



## 'ஸ்மார்ட்போன் பயன்படுத்தத் தடை' ஆப்கானிஸ்தானில் அதிரடி உத்தரவு



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தலிபான் அரசாங்கம், நீதிபதிகள் உட்பட இராணுவம் மற்றும் சிவில் அமைப்புகளில் பணியாற்றும் அனைத்து அரசு ஊழியர் களும் ஸ்மார்ட்போன் பயன்படுத்துவதற்கு நாடு தழுவிய ரீதியில் அதிரடித் தடை விதித்துள்ளது.

ஜூன் 16 முதல் அமு [illegible] தரவை மீறி ஸ்மார்ட் போன் பயன்படுத்தும் ஊழியர்களின் கையடக்க தொலைபேசிகளை பொது வெளியில் உடைத்து நொறுக்கப்படும் என்றும், அவர்கள் கடுமையான சட்டப் பூர்வ தண்டனைகளை எதிர்கொள்ள நேரிடும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக அரசுத் துறைகளில் பெரும்பா லான கோப்பு பரிமாற்ற ங்கள், அறிவிப்புகள் வட்ஸ் அப் மற்றும் மின்னஞ்சல் மூலம் கையாளப்பட்டு வந்ததால், இந்த திடீர் ஸ்மார்ட்போன் தடையால் பல மாகாணங்களின் நிர்வாக நடைமுறைகள் முற்றிலும் முடங்கியுள்ளதாக அரசு ஊழியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேலும், தலிபான்கள் ஆட்சிக்கு வந்ததில் இரு ந்து பெண்கள் கல்வி மற் றும் ஊடக சுதந்திரம் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளின் தொடர்ச்சியாகவே, மக்களின் தகவல் தொடர்பு சுதந்திரத்தை முடக்கும் இந்த நடவடிக்கை அமைந்துள்ளதாக மனித உரிமை ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர் என ரொய்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்களுக்கான அஞ்சல் ஓட்டப்போட்டி

# மன்னார் தோட்டவெளி அ.த.க பாடசாலை புதிய சாதனை



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகள் யாழ் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் 16 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான 4X100 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் மன்னார் தோட்டவெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைச் சேர்ந்த வீராங்கனைகள் 55.2 செக்கன்களில் ஓடி புதிய சாதனையை பதிவு செய்து தங்கப் பதக்கத்தையும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி இரண்டாம் இடத்தையும் மன்னார் பற்றிமா மகா வித்தியாலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர். (3-90)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1995- இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி-பா-0
உயரம் : 5'7"
தகைமை/தொழில்: A/L, Restaurant
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ : B/16986

பிறப்பு:1994- -இந்து
நட்சத்திரம்:மூலம்
9இல்சூரிசெவ்
உயரம் :5'7"
தகைமை/தொழில்- A/L,Phone shop
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/16988

பிறப்பு:1990-இந்து
நட்சத்திரம்:விசாகம்
கி-பா-29 3/4
உயரம் :5'7"
தகைமை/தொழில்:O/L, France
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16989

பிறப்பு: 1996- இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி-பா-6
உயரம்:5'7"
தகைமை/தொழில்-BBA,Teacher
எதிர்பார் ப் பு: உத்தியோகம்
தொ.இ: B/16990

பிறப்பு: 1997- இந்து
நட்சத்திரம் : அனுசம்
8இல் செவ்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L, Supervisor
எதிர்பார்ப் பு: தகுதியான பெண்
தொ.இ: B/16992

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1994-இந்து
நட்சத்திரம் : பூசம்
கி-பா- 23
உயரம் : 5'3"
தகைமை/தொழில்: Nurse, France
எதிர்பார்ப்பு: PR உள்ளவர்
தொ.இ: G/16984

பிறப்பு-2004-இந்து
நட்சத்திரம்:ரேவதி
கி-பா-29
உயரம் : 5'3"
தகைமை/தொழில்: BSC,UK
எதிர்பார் ப் பு: Only UK
தொ.இ: G/16987

பிறப்பு-1986-இந்து
நட்சத்திரம்:கார்த்திகை
கி-பா-56
7இல்செவ்
உயரம் : 5'5"
தகைமை/ தொழில்: BSC, MBA, Engineer
எதிர்பார் ப் பு: உயர்பதவிகள்
தொ.இ: G/16991

பிறப்பு-1999-இந்து
நட்சத் திரம் : பூசம்
கி-பா-59
உயரம் : 5'3"
தகைமை/தொழில்: A/L, தையல்
எதிர்பார் ப் பு: வெளிநாடு
தொ.இ: G/16993

பிறப்பு-1993 - இந்து
நட்சத் திரம்-அனுசம்
கிபா- 20
உயரம் : 5'
தகைமை/தொழில்: BSC,MSC, London
எதிர்பார் ப் பு: தகுதியான ஆண்
தொ.இ: G/16994

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 603



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# அது அந்தக் காலம்!

இப்போது சொல்லப் போவது இங்கிலாந்திலே நடந்த ஒரு சம்பவம்.

இதை பேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார். அது என்னவென்றால்.

அங்கே ஒரு சமயம் தேர்தல் நடந்து முடிந்தது. புதிய அரசு பொறுப்புக்கு வந்தது. காமன்ஸ் சபையின் முதல் கூட்டத் தொடர். எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் எழுந்தார்.

புதுசாக பொறுப்புக்கு வந்திருக்கின்ற அமைச்சர் ஒருத்தரைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார்.

தேர்தலுக்கு முன்பு... இவர் வெறும் உறுப்பினராக இருந்தபோது சாதாரண உடைதான் உடுத்தியிருந்தார். இப்போது அமைச்சரான பிறகு ஆடம்பர உடை அணிகின்றார்.

விலை உயர்ந்த இந்த ஆடையை வாங்கி அணியக் கூடிய அளவுக்கு வசதி... அமைச்சர் ஆன பின்பு இவருக்கு எப்படி வந்தது? இதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கமளித்தால் நல்லது அப்படி என்று கேட்டுவிட்டு உட்கார்ந்தார்.

அமைச்சர் எழுந்தார். எதிர்கட்சி உறுப்பினர் அவர்கள் சொல்வது உண்மைதான், எனக்கு வசதி குறைவு என்பதும் உண்மை. நான் அமைச்சர் ஆன பிறகு... அதாவது பதவி ஏற்றதும் எனக்குப் பாராட்டுத் தெரிவிப்பதற்காக எனது நெருங்கிய நண்பரான தொழிலதிபர் ஒருத்தர் என்வீட்டுக்கு வந்தார்.

அவர்தான் சொன்னார். "நீங்க சாதாரண உறுப்பினராக இருந்தபோது உங்கள் வசதிக்குத் தகுந்தமாதிரி சாதாரணமான சட்டைஅணிந்து கொண்டு சபைக்குப் போயிட்டு வந்தது சரி ஆனா இப்போது நீங்கள் அமைச்சர் ஆகி விட்டிர்கள்.

இனிமேல் அமைச்சர்என்கிற.. அந்த பதவியின் அந்தஸ்துக்குத் தகுந்த மாதிரி நல்ல உடைகள் அணிய வேண்டாமா?" என்றார்.

"நல்ல உடைகள் வாங்குவதற்கு என்னிடம் ஏது வசதி?" என்றேன்.

பரவாயில்லை.. நானே உங்களுக்கு ஆறு ஜோடி உடைகள் தைத்துத்தருறேன்!" என்றார். தந்தார். அவர் அன்பளிப்பாகத் தந்த உடைகளைத்தான் இப்போது நான் அணிந்திருக்கிறேன்" அப்படி என்று அமைச்சர் விளக்கமளித்தார்.

எதிர்கட்சி உறுப்பினர் மறுபடியும் எழுந்தார்:

"சாதாரண உறுப்பினராக நீங்க இருந்தபோதும் அந்தத் தொழிலதிபர் உங்களுக்கு நெருங்கிய நண்பராகத்தானே இருந்தார். அந்த சமயத்திலே இந்த எண்ணம் அவருக்கு ஏன் வரவில்லை?

அப்போது உங்களுக்காக பணம் செலவு செய்யத் தயாராக இல்லாத ஒருத்தர்.. நீங்கள் இப்போது அமைச்சர் ஆனபிறகு உங்களுக்காகச் செலவு செய்ய முன்வந்திருக்கிறார்-என்றால் என்ன அர்த்தம்?

இதன் மூலம். உங்க ள் அமைச்சர் பதவியைப் பயன்படுத்தி நாளைக்கு ஏதோ ஒரு பெரிய இலாபம் தரக்கூடிய காரியத்தை உங்கள் மூலமாக சாதித்துக்கொள்ள நினைக்கிறார் என்று தான் அர்த்தம்? அதனாலே அவர் கொடுத்த அந்த உடையை நீங்க வாங்கிக் கொண்டது ஊழலின் அடையாளம்தான்!"

அப்படி என்று நேரடியாகவே குற்றம் சாட்டினார். அந்த எதிர்க்கட்சி உறுப்பினர்.

அதன் விளைவு என்ன தெரியுமா?

அன்றைக்கு மாலையே அந்தப் புதிய அமைச்சர் தம்முடைய பதவியை இராஜினாமா செய்துட்டார். ஆமாம். பதவியிலேயிருந்து விலகிட்டார்.

இது அறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துச் சொன்ன ஓர் உதாரணம்: இப்போது தகவலுக்காக நான் ஒரு உதாரணம் எடுத்துச் சொல்லணும் என்று ஆசைப்படடுகிறேன்.

புதுசாக பதவிக்கு வந்த ஒரு அமைச்சருக்கு ஒரு பெரிய தொழிலதிபர் விருந்து வைத்தார்.. தனது தொழிற்சாலையிலே தயாரான உயர்ந்த கார் ஒன்றை அவருக்கு அன்பளிப்பா க கொடுப்பதற்காக முன்வந்தார்.

உடனே இவர் இது ஊழலுக்கு வழி வகுக்கும். நான் என்னுடைய பதவிகாலத்திலே எதையுமே இலவசமாக வாங்குவதில்லை அப்படி என்றார். தொழிலதிபர் பார்த்தார், முடிவு பண்ணிட்டேன்"

"சரி. அப்படி என்றால் இந்த காரை நீங்க இலவசமாக வாங்கிக்க வேண்டாம். இதோட விலை ஒரு ரூபாய். ஒரு ரூபாய் மட்டும் கொடுத்து விட்டு இந்தக் காரை எடுத்துக் கொள்ளுங்கள்!" என்றார்.

அவர் பார்த்தார் : "அப்படி என்றால் இந்தாங்க பத்து ரூபாய். பத்து காரைக் கொடுத்துடுங்க!" அப்படி என்றார்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் தமிழ் மற்றும் தமிழ்மொழி கற்பித்தலில் சிறப்பு கலை மாணி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk என்னும் இணையத் தள முகவரியில் பிரவேசித்து எதிர்வரும் 15.07.2026 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும்.


மேலதிக விபரங்களிற்கு யாழ் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவில் என்னும் முகவரியூடாகவும் 021 222 33 74 எனும் தொலை பேசியூ டாகவும் தொடர்பினை மேற்கொண்டு விண்ணப்பிகக் முடியும் என யாழ் பிராந் திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறி வித்துள் ளார். (8)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் தகவல் தொழில்நுட்ப விஞ்ஞானமாணி கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண் ணப் பப் படிவங் களை www.ou.ac.lk என்னும் இணையத் தள முகவரியில் பிரவே சித்து எதிர்வரும் 19.07.2026 ஆம் திகதி வரை விண் ணப் பிக்க முடியும்.

மேலதிக விபரங்களிற்கு யாழ் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவில் என்னும் முகவரி யூடாகவும் 021 222 3374 எனும் தொலைபேசியூடாகவும் தொடர் பினை மேற்கொண்டு விண்ணப் பிக்க முடியும் என யாழ் பிராந்திய நிலைய உதவிப்ப ணிப்பாளர் அறிவித்துள்ளார். (8)

# சட்ட விரோத மீன்பிடி; சுருக்கு வலை பறிமுதல்



(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டுப் பகுதியில் சட்டவிரோதமாக மீன் பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஒருவரின் சுருக்கு வலை வெற்றிலைக் கேணி கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

சட்டவிரோத செயற்பாடுகளை தடுக்கும் முயற்சியில் வெற்றிலைக்கேணி கடற்படையினர் தொடர் சுற்றி வளைப்புகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந் நிலையில் கடந்த புதன் கிழமை கட்டைக்காடு கடற்கரையில் ஒளி பாய்ச்சி மீன் பிடிப்பதற்காக கடற்கரையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுருக்கு வலை ஒன்று கடற்படையின் விசேட தேடுதலில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

பறிமுதல் செய்யப்பட்ட சுருக்குவலை மேலதிக நடவடிக்கைகளுக்காக யாழ்ப் பாணம் கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (8-60)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார சந்தைவிலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | நெல்லியடி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 150 | 150 | 200 | 160 | 140 |
| உருளைக்கிழங்கு | 220 | 210 | -- | 220 | -- | 340 |
| பச்சைமிளகாய் | 600 | 650 | 600 | 800 | 550 | 720 |
| தக்காளி | 850 | 700 | 620 | 800 | 850 | 680 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 160 | 150 | 200 | 200 | 130 |
| கோவா | 250 | 250 | 250 | 200 | 250 | 200 |
| கரட் | 350 | 350 | 380 | 400 | 400 | 335 |
| பூசணி | 120 | 140 | 100 | 160 | 130 | 120 |
| புடோல் | 150 | 150 | 200 | 250 | 200 | 300 |
| வாழைக்காய் | 150 | 140 | 120 | 160 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 400 | 400 | 200 | 330 |
| பெரிய வெங்காயம் | 220 | 220 | -- | 200 | 200 | -- |
| பாகற்காய் | 1800 | 2000 | -- | 1500 | 1000 | -- |
| வெண்டக்காய் | 200 | 250 | 250 | 400 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 350 | 320 | 400 | 400 | -- | 380 |
| பயற்றங்காய் | 400 | 200 | 450 | 400 | 400 | 280 |
| லீக்ஸ் | 400 | 400 | 350 | 400 | 400 | 310 |
| பீற்றூட் | 400 | 450 | 400 | 500 | 600 | 450 |
| கறிமிளகாய் | 450 | 500 | 500 | 400 | 500 | 360 |
| முருங்கைக்காய் | 600 | 650 | 500 | 800 | 1100 | 900 |
| போஞ்சி | 650 | 500 | 600 | 500 | 500 | 480 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | -- | 150 | -- | -- |
| கீரை – 1 பிடி | 150 | 70 | 80 | 100 | -- | 70 |
| தேசிக்காய் | 600 | 400 | 350 | 450 | 400 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 125 | 110 | 100-140 | -- | 90 |
| இராசவள்ளி | 400 | 450 | 350 | 350 | -- | 300 |
| வெங்காயப்பூ | 450 | 400 | 420 | 600 | -- | - |
| முள்ளங்கி | 100 | 180 | 180 | 200 | 250 | 170 |
| பொன்னாங்காணி | 80 | 100 | -- | 60 | -- | 50 |
| வல்லாரை | 60 | 70 | -- | 100 | -- | 50 |
| ஈரப்பலா | 100 | | -- | 250 | -- | -- |

# ஏல விற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற வளாகத் தில் எதிர்வரும் 02.07.2026 ஆம் திகதியன்று காலை 9 மணிக்கு மணல் ஏல விற் பனை நடைபெறவுள்ளது.

ஏல விற்பனைக்கான மணலினை ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலம் முன்பாக பதிவாளரின் அனுமதியுடன் பார் வையிட லாம் என கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதிவா ளர் அறி வித்துள்ளார். (8)

# இராசிபலன்

27.06.2026
ஆனி 13, சனிக்கிழமை
திரயோதசி பின்னிரவு 2.03 மணிவரை

அனுசம் முன்னரவு 11.55 மணிவரை
சுப நேரம் -12.55-4.25மணிவரை
இராகுகாலம் -8.55-10.25 மணிவரை

சனிப்பிரதோச விரதம்
சந்திராஷ்டமம்-
அச்சுவினி, பரணி.

வள்ளுவன்

**மேஷம்**
ஒருவேலையை முடிக்க ஒன்றுக்கு இரண்டு முறை அலைய நேரிடலாம், குடும்பத்தில் எதிர்பாராத விதமாக சில முரண்பாடுகள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்**
பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், உறவினர் பகை மாறும், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் செயற்படுவீர்கள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்

**துலாம்**
தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், தேவைகள் பூர்த்தியாகும், பக்குவமாக நடந்து பாராட்டுக்களைப் பெறுவீர்கள், புதிய பாதை புலப்படும் நாள்.

**மகரம்**
பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், பலரது அன்பிற்குப் பத்திரமாவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.

**ரிஷபம்**
உறவினர்கள் நண்பர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், காரிய அனுகூலமுண்டு, வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்**
தொலைபேசிவழியில் ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்**
இல்லத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், கற்பனை மிகுதியான நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கும்பம்**
அன்பு நண்பர்களின் ஆதரவு கிடைக்கும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**மிதுனம்**
பிறர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்,

**கன்னி**
உயர்வான சிந்தனைகள் தோன்றி மறையும், செல்வ நிலை உயரும், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், செல்வ நிலை உயரும் வாய்ப்புண்டு.

**தனுசு**
கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், மறக்க முடியாத சம்பவமொன்று இடம் பெறும் வாய்ப்புண்டு, அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**மீனம்**
எதிர்காலம் குறித்த முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும் திக்கும் பயணங்கள் இடம் பெறலாம்.

வாலிபப் பருவத்தில் கல்விப்பயணத்தை நிதானமாய் கடந்து செல்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 5

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 1074





இந்தப் பெண் சொல்வதிலிருந்தும் சக்கரவர்த்தியை உண்மையிலேயே பயங்கரமான அபாயம் நெருங்கியிருப்பதாகத் தெரிகிறது. அது முதன் மந்திரிக்குக் கூடத் தெரியாது. ஆகையால் தாங்கள் கொடும்பாளூர் இளவரசியை அழைத்துக் கொண்டு உடனே தஞ்சாவூருக்குச் செல்லுங்கள். கொடும்பாளூர் படைகள் ஒருவேளை கோட்டையை முற்றுகையிட்டிருந்தால் தங்களைத் தவிர யாராலும் அப்படைகளைத் தாண்டிக் கொண்டு போக முடியாது. வானதி தேவியும் தங்களுடன் வந்தால் அதிக வசதியாகப் போய்விடும். நான் இந்த ஓடக்காரப் பெண்ணைச் சமாதானப்படுத்தி அழைத்துக் கொண்டு, ஒரு படகு சம்பாதித்துக் கொண்டு பொன்னியின் செல்வரிடம் போகிறேன். ஜோதிடரின் சீடனைப் படகு கொண்டு வருவதற்காக ஏற்கனவே அனுப்பி விட்டேன்!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

வானதி திடுக்கிட்டு எழுந்தவள் அவனை வெறிக்கப் பார்த்து, "முடியாது! முடியாது! பொன்னியின் செல்வரிடந்தான் போவேன்! செத்தாலும் அவர் காலடியிலே தான் சாவேன்!" என்றாள்.

அதைக் கேட்ட பூங்குழலி, 'கிறீச்' என்ற குரலில், "வைஷ்ணவரே! நான் உம்முடன் வரமுடியாது! கோடிக்கரையில் என் காதலர்கள் என்னை அழைத்திருக்கிறார்கள்! நள்ளிரவில் நெருப்பைக் கக்கும் என் காதலர்கள் என்னை அழைக்கிறார்கள்! இளவரசி ஓலை கொடுத்து அனுப்பினாரே, அந்த வாணர்குல வீரருக்குக்கூட என் காதலர்களை நான் காட்டினேன். அவர்களிடம் நான் போக வேண்டும்!" என்று கூவினாள்.

இதுவரையிலும் இவர்களுடைய சம்பாஷணையில் கலந்து கொள்ளாமல் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு திகைத்து நின்ற ஜோதிடர் இப்போது குறுக்கிட்டார். "அம்மா! அம்மா! எல்லாரும் சற்றுச் சும்மா இருங்கள்!" என்று இரைந்து கத்தினார்.

ஒரு நிமிடம் அங்கே பேச்சின் ஒலி நின்றிருந்தது. அப்போது வேறோர் ஒலி, ரோமாஞ்சனத்தை உண்டாக்கும் படியான பேரொலி, புயல் அடிக்கும்போது அலை கடலில் உண்டாகும் இரைச்சலையொத்த பேரோசை கேட்டது.

"தாய்மார்களே! இந்தச் சந்தர்ப்பம் பார்த்து நீங்கள் இந்தப் பாவியின் குடிசைக்கு வந்தீர்களே! நான் நாட்டுக்கெல்லாம் ஜோதிடம் சொல்லி வந்தவன். உங்களுக்கு எச்சரிக்கை செய்து அனுப்பாமல் இருந்து விட்டேனே?" என்று ஜோதிடர் புலம்பினார்.

"ஐயா! இது என்ன? புதிய அபாயம் எங்களுக்கு என்ன வருகிறது?" என்று குந்தவை கேட்டாள்.

"தாயே! அரசலாற்றில் வெள்ளம் பெருகி வடகரையை உடைத்துக் கொள்ளும் போலிருக்கிறது என்று காலையிலேயே என் சீடன் சொன்னான். அரசலாறு உடைத்துக் கொண்டால் அந்த ஜலமெல்லாம் காவேரியில் வந்து விழும். காவேரி கரை புரண்டால் இந்த ஏழையின் வீடு அடியோடு முழுகிப் போய் விடும். காவேரிக்கு வெகு சமீபத்தில் இந்த வீடு இருக்கிறது. வாருங்கள்! வாருங்கள்! வெளியே வாருங்கள்!" என்று ஜோதிடர் கதறிக் கொண்டு, வீட்டை விட்டு வெளியே ஓடினார்.

எல்லாரும் அவரைத் தொடர்ந்து வெளியேறினார்கள். பீதி கொண்ட முகத் தோற்றத்துடன் ஜோதிடர், "அதோ!" என்று சுட்டிக் காட்டினார்.

(தொடரும்)

---

## சிறுவர் அரங்கம்

# இளவரசி தேவயானி



ஆனால் அவன் தைரியம் மிக்கவன். தங்களை எதிர் த்துத் வீரமுடன் போரிடுவான். இதனால் இரு தரப்பிற்கும் பலத்த உயிர் சேதமும் பொருட்சேதம் உண்டாகும். இதனால் உண்டாகும் பெரும் துயரமும், நிதியும் வந்து சேரும். ஏற்கனவே கடந்த சுமையும் கடைசியில் குடி மக் களைத் தான் மூன்றாண் டுகளாக வறட்சியின் காரண மாக குடிமக்கள் பெரும் அவதிக்கு ஆளாகிக் கொண்டி ருக்கிறார்கள்.

அரசுக்குச் செலுத்த வேண் டிய அடிப்படை வரிகளைக் கூட செலுத்த முடியாமல் தவி த்து வருகிறார்கள். இதில் போரினால் உண்டாகும் கூடு தல் சுமை அவர்கள் மத்தியில் கடும் அதிருப்தியை [illegible] மன்னா யுத்தம் என் பது அகராதியில் இடம் பெறக் கூடாத கொடிய யுத்தத்தில் வென்றவர்கள் வார்த்தை. யாருமிலர். அதில் ஈடுபட்ட அனைவருக்கும் அது தோல்வியை யேப் பரிசாகத் தந்திருக்கிறது. இது தாங்கள் அறியாததல்ல. நம் நாட்டில் கற்றறிந்த அறிஞர் பெருமக்களுக்கா பஞ்சம் ? அவர்களைத் தூது அனுப்புங்கள். அவர்கள் சென்று பேசி வரட்டும். யுத்தம் வேண்டாம். புறாக்கள் பறக்கட்டும். இதுவே எனது வேண்டுகோள்" என்ற தேவயானி மன்னரின் பதிலை எதிர்பாராமல் அங்கிருந்து விடுவிடுவென்று வெளியேறிச் சென்று விட்டாள்.

மன்னர் யோசித்தார். அவையில் ஒரு கனத்த அமைதி நிலவியது. அனைவரும் ஒருவித எதிர்ப்பார்ப்புடன் மன்னரின் முகத்தைப் பார்த்தபடி இருந்தார்கள். அவர்களின் கண்களில் சற்றுமுன் தெரிந்த யுத்த வெறி இப்போது இல்லை. தான் ஒரு தலைப்பட்சமாக எடுத்த முடிவிற்கு வேறு வழியின்றி அவர்கள் உடன்படுகிறார்கள் என்ப [illegible] கொண்டார்.

குமரகுருபரர் தலைமையில் ஒரு அறிஞர் குழுவைத் தூது செல்லப் பணித்தார். அவர்கள் நடத்திய பேச்சு வார்த்தையில் எதிரி நாட்டு மன்னன் தான் ஆக்கிரமித்த நிலப்பகுதிகளிலிருந்து வெளியேற ஒப்புக் கொண்டான். வெற்றி! இது மன்னர் பெற்ற வெற்றி அல்ல. தேவயானி தந்த வெற்றி. தனது திறமையான சொல்லா டலால் மன்னரின் மனத்தை மாற்றிய வெற்றி.

தேவயானியால் ஒரு யுத்தத்தையே தடுத்து நிறுத்த முடி யும் என்றால் அவளால் அளப் பறிய நற்செயல்களையும் திறம் பட செய்ய இயலுமே? தேவ குமாரனுக்கு ஒரு மதியூகம் மிக்க மந்திரியாய் செயற்பட முடியுமே?

அப்படிப்பட்ட பெண்ணை அரச குலத்தில் பிறவாதவள் என்ற ஒரே காரணத்திற்காக நான் ஒதுக்கி வந்தேனே? சுடு சொற்கள் கூறி அவமதித் தேனே? மன்னர் தனது செயல்களை எண்ணி வருந்தினார். அவர் மனம் மாறினார். தேவ குமாரனுக்கே முடி சூட்டினார். தேவ குமாரன் தேவயானி தம்பதி யர் நீண்ட நெடுங்காலம் மர கத நாட்டை சீரும் சிறப்புடன் ஆட்சி செய்தார்கள்.

முற்றும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்.
– திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தீவகத்தில் வாழும் மக்களுக்கு இழைக்கப்பட்ட பெருந்துரோகம்

மண்டைதீவில் திட்டமிடப்பட்டிருந்த சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைவதற்கான சாத்தியம் இல்லை என இலங்கை கிரிக்கெட் சபையின் செயலாளர் கூறியுள்ளார்.

அவரின் இந்த அறிவிப்பு சர்வதேச கிரிக்கெட் மைதானம் மண்டைதீவில் அமையாதென்பதை ஐயம் தெளிவுற எடுத்துக் கூறியுள்ளது.

என்ன செய்ய முடியும். தீவகத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமையப் பெற்றாலாவது, தீவகத்தில் வாழ்கின்ற மக்களின் பொருளாதாரம், கல்வி, போக்குவரத்து, சுய தொழில் முயற்சிகள் விருத்தியடையும் என நம்பப்பட்டது.

ஆனால் அந்த நம்பிக்கையில் மண்ணை அள்ளிப்போட்டது போல அந்தத் திட்டம் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆம், சர்வதேச கிரிக்கெட் மைதானம் சாத்தியம் இல்லை என்ற தகவல்கள் ஏலவே அரச தரப்புகள் ஊடாக வெளிவந்திருந்தன.

ஏதோ! தெரியாத்தனமாக மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தை அமைப்பது எனக் கூறி விட்டோம். அதை எப்படி நிறுத்துவது என்று தெரியாமல் திண்டாடிய தரப்புகள், இதற்கு உரியவர்கள் யார் என ஆராய்ந்தன.

அதோ! பறவைகள், வனவிலங்குகள், கால்நடைகள், கண்டல் தாவரங்கள், மேய்ச்சல் தரவைகள், மழைநீர் தேங்கும் இடங்கள், சுற்றுச் சூழல்கள் என இவை யாவும் பாதிக்கப்படும் எனக் கூறக்கூடிய தரப்புகளை அவர்கள் இனங்கண்டு, அவர்களை வாலாயப் படுத்தினர்.

பிறகென்ன, குய்யோ! முறையோ! மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமையவுள்ள பிரதேசம் பறவைகள் வந்து போகும் இடங்கள். மாடுகளின் மேய்ச்சல் தரவைகள். கடல் வளத்திற்குப் பாதுகாப்பான இடங்கள். இந்த இடத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தை எப்படி அமைக்க முடியும் என்று அவர்கள் கூப்பாடு போட, அதனைச் சாட்டாக எடுத்துக் கொண்ட அரசாங்கம்; சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைப்பதை மெல்லக் கைவிட்டு விலகிக் கொண்டது.

என்ன செய்வோம். தீவகத்தில் வாழ்கின்ற மக்களின் அன்றாட சீவனோபாயப் பிரச்சினைகள் பற்றி எதுவும் அறியாதவர்கள் – இலங்கையின் கல்வி வலயங்களில் கல்வி அடைவு மட்டத்தில் கடைசி இடமாக தீவக வலயம் இருப்பது பற்றி இம்மியும் சிந்திக்காதவர்கள் – அங்கு கற்கின்ற மாணவர்களின் எதிர்காலம் பற்றி எந்தக் கவலையும் இல்லாதவர்கள் – தங்கள் பிள்ளைகளை வெளிநாடுகளில் வசதி வாய்ப்புடன் வாழ வைத்துக் கொண்டு, தங்களின் பொழுது போக்கிற்காக ஏழைப் பிள்ளைகளின் வயிற்றில் அடிக்கின்ற இந்த ஈனத்தனத்தை என்னவென்று சொல்வது. யாரிடம் முறையிடுவது. அந்தோ! இஃது கொடுமையிலும் கொடுமை.

# சாவகச்சேரி உப தவிசாளர் நீக்கம் ஜனநாயக விரோதச் செயல்

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிப்பு

(கொழும்பு)

சாவகச்சேரி உப தவிசாளர்ஆளுநரால் பதவி நீக்கப்பட்டது ஜனநாயக விரோதச் செயல்எனப்பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை (25) நடைபெற்ற போதைப்பொருள் அச்சுறுத்தலினை எதிர்த்துப் போராடுதல் தொடர்பிலான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் நடக்கும் விடயங்கள் அனைத்துக்கும் ஜனாதிபதியே பொறுப்பு கூற வேண்டும். அரசாங்க அதிபராக வேதநாயகனை சிறப்பான சேவகராக மக்கள் கருதினாலும் இப்போது ஜனாதிபதியின் முகவராக நியமிக்கப்பட்டு ஆளுநராக ஜனாதிபதியின் விருப்பத்தை திருப்திப்படுத்தவும் ஜனாதிபதியின் விருப்பத்திற்கு அடிபணிந்து செயற்படும் நிலைக்கு அவர் தள்ளப்பட்டுள்ளார்.

வடக்கு ஆளுநர் வர்த்தமானியொன்றை வெளியிட்டுள்ளார். சாவகச்சேரி பிரதேச சபையின் உபதவிசாளரை பதவியில் இருந்து நீக்கியுள்ளதாக அறிவித்துள்ளார்.

ஆளுநர் எந்தளவுக்கு இந்த அரசாங்கத்தின் மற்றும் ஜனாதிபதியின் ஜனநாயக விரோத செயற்பாட்டுக்கு துணை போகின்றார். உண்மையில் ஜனாதிபதியின் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளுக்கு அவர் ஒரு கூலியாக வேலை செய்கின்றார்.

அதுவே வடக்கில் நடக்கின்றது. ஆளுநர் ஜனாதிபதியின், அரசாங்கத்தின் மற்றும் அரசியல்வாதிகளின் கட்டளைகளுக்கிணங்க செயற்படுகின்றார். இதுவே உண்மை.

இந்த அரசாங்கம் மிகத்தெளிவாக போதைப் பொருளை பரப்புவதில் இருந்து வடகிழக்கில் வாழுகின்ற மக்களை அழிக்கும் வேலைகளையே முன்னெடுக்கின்றது. இதற்கு முன்னர் இருந்த இனவாத அரசாங்கங்கள் முன்னெடுத்தவற்றை இந்த அரசாங்கமும் முன்னெடுக்கின்றது.

ஜனாதிபதி ஜனநாயகம் பற்றி வகுப்பெடுப்பதில் நேர்மாறாகவே வடக்கு, கிழக்கில் அவரின் முகவராக, எடுபிடியாக நியமிக்கப்படும் ஆளுநரை வைத்து செயற்படுகின்றது என்றார். (ம-7)

# ஆளுநர் வர்த்தமானி அறிவித்தலை மீள் பரிசீலனை செய்ய வேண்டும்

## சாவகச்சேரி நகரசபை தவிசாளர்

வடக்கு மாகாண ஆளுநர், சாவகச்சேரி நகரசபையின் உப தவிசாளர் கிஷோர் தொடர்பில் வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என சாவகச்சேரி நகரசபை தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஸ் வேண்டுகோள் ஒன்றினை முன்வைத்துள்ளார்.

ஆளுநரால் உறுப்பினர் பதவி மற்றும் உப தவிசாளர் பதவி ஆகிய பதவி நிலைகளிலிருந்து கிஷோர் அதிரடியாக நீக்கப்பட்டுள்ள செயற்பாட்டைக் கண்டித்து, சாவகச்சேரி வர்த்தகர்கள் கதவடைப்பு மேற்கொண்டு அதேநேரம் கவனயீர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டிருந்த நிலையிலேயே தவிசாளர் மேற்படி வேண்டுகோளை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பாக நகரசபை தவிசாளர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

உப தவிசாளர் கிஷோர் உறுப்பினர் மற்றும் உப தவிசாளர் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளமை மனவருத்தமளிக்கின்றது.

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் மிக முக்கியமான செயற்பாட்டாளராக கிஷோர் காணப்படுகின்றார். அவருடைய பதவி இழப்பு பேரிழப்பாகக் காணப்படுகின்றது என்றார். (ம-7,30)

# பூநகரி கௌதாரிமுனைப் பிரதேசத்தை சுற்றுலா மையமாக அபிவிருத்தி செய்வது தொடர்பில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பூநகரி, கௌதாரிமுனைப் பிரதேசத்தை ஒரு சிறந்த சுற்றுலா மையமாக அபிவிருத்தி செய்வது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களின் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கௌதாரிமுனையைச் சுற்றுலாத் தலமாக அபிவிருத்தி செய்யும் நோக்கில், நகர அபிவிருத்தி அதிகார சபையினால் விசேட வரைவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தீர்மானத்துக்கு அமைவாகக் குழுவொன்று நியமிக்கப்பட்டு, இத்திட்டத்திற்கான முதலீட்டாளர்களிடமிருந்து விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளமை குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

நேற்றைய கலந்துரையாடலின்போது, குறித்த பிரதேசத்துக்கான உட்கட்டமைப்பு வசதிகளை எவ்வாறு மேம்படுத்துவது மற்றும் இத்திட்டத்துக்குத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை எவ்வாறு பெற்றுக்கொள்வது உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்தாலோசிக்கப்பட்டது. (ம-7)

# மஞ்சவனப்பதி முருகனுக்கு இன்று சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய பராபவ வருஷ கும்பாபிஷேக தினமான இன்று (27) சனிக்கிழமை முருகப் பெருமானுக்கு நவோத்திர சகஸ்திர (1009) சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளது.

அதன்பிரகாரம் இன்று காலை 7.00 மணிக்கு சங்காபிஷேக கிரியைகள் ஆரம்பமாகித் தொடர்ந்து விநாயகர் முதலாய சண்டேசுவரர் வரை அனைத்து பரிவார மூர்த்திகளுக்கும் விஷேட அபிஷேகம் இடம்பெற்று காலை 10.00 மணியளவில் முருகப்பெருமானுக்கு நவோத்திர சகஸ்திர சங்காபிஷேகம் இடம் பெறவுள்ளது.

மாலை 5.00 மணிக்கு வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து எம்பெருமானுக்கு திருவூஞ்சல் இடம்பெற்று, மாலை 6.30 மணியளவில் அழகிய பூந்தண்டிகையில் விநாயகர் சகிதம் முருகப்பெருமான் மணவாளக்கோலத்தில் வள்ளி தேவசேனா சமேதராய் ஆரோகணித்து கிராம வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின் அறுவடை மேலாண்மை (Post harvest management): உணவுப் பாதுகாப்பையும் தரத்தையும் உறுதிப்படுத்தும் அறிவியல் நடைமுறை

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு

இன்றைய வேகமான உலகில் உணவுத் தேவைகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. ஆனால் விவசாயிகள் பல்லாயிரம் முயற்சியுடன் உற்பத்தி செய்த பயிர்களின் ஒரு பெரிய பகுதி பின் அறுவடை இழப்புக்கள் காரணமாக நுகர்வோரிடம் சேராமல் வீணாகிறது. இலங்கை உள்ளிட்ட பல நாடுகளில் மொத்த வேளாண்மை உற்பத்தியின் 20 - 40% வரை பின் அறுவடை இழப்புக்களால் சேதமடைகிறது என்பது வருத்தத்துக்குரிய உண்மை. இந்த இழப்புக்கள் உணவுப் பாதுகாப்புக்கு மட்டுமல்லாமல், விவசாயியின் வருமானத்தையும் நாட்டின் பொருளாதாரத்தையும் நேரடியாக பாதிக்கின்றன. இந்த சூழலில் பின் அறுவடை மேலாண்மை என்பது ஒரு சாதாரண தொழில்நுட்பம் அல்ல விவசாயத்தின் எதிர்காலத்தை பாதுகாக்கும் முக்கிய தேவையாக மாறியுள்ளது. பயிர்கள் அறுவடை செய்யப்பட்டாலும் அவற்றின் moisture loss, ethylene production தொடர்ந்து நடைபெற்ற தரத்தைக் குறைத்து வேகமாக நாசமாக்கின்றன. அறுவடைக்கு பிந்தைய இழப்புக்களுக்கான காரணங்கள்,

1. உயிரியல் (Biological) - பூஞ்சை, பக்றீரியா, வைரஸ் மற்றும் பூச்சிகளும் விலங்குகளும்.
2. இரசாயனம் (Chemical) - enzyme தொழிற்பாடு, தவறான இரசாயனப் பயன்பாடு.
3. இயற்பியல் (Physical) - அதிக / குறைந்த வெப்பநிலை, ஈரப்பதன், மழை.
4. உடற் செயலியல் (Physiological) - சுவாசம், நீரிழப்பு, எதலீன் உற்பத்தி
5. இயந்திர (Mechanical) - அறுவடை உற்பத்தி, போக்குவரத்து Packaging அத்துடன் சேமிப்பில் ஏற்படும் சேதங்கள்/ அழுத்தங்கள்.

பயிர்களின் அறுவடை நேரம், ஈரப்பதன், வானிலை, அறுவடைக் கருவிகளின் தரம் போன்றவை நேரடியாக இழப்புக்களை ஏற்படுத்தக் கூடியவை. உதாரணமாக மிக அதிக ஈரப்பதத்தில் அறுவடை செய்யப்பட்ட தானியங்கள் mould formation ஏற்படுத்தும் மிக சூடான நேரத்தில் அறுவடை செய்யப்பட்ட காய்கறிகள் வேகமாக வாடி விடுகின்றன. (wilting) ஆகவே அறுவடை செய்யும் போது சுத்தமான கருவிகளை பயன்படுத்தல், விளைச்சலுக்கு காயமோ /பலத்த அழுத்தமோ இல்லாமல் கவனமாக அறுவடை செய்தல். அத்துடன் அதிகாலை / மாலையில் அறுவடை செய்தல் போன்றவற்றை பின்பற்றுதல் மூலம் இழப்பை குறைக்கலாம்.

சுத்திகரிப்பும் தரவரிசைப்படுத்தலும் சந்தையின் தரத்தை நிர்ணயிக்கும் முக்கிய படிகளாகும். அறுவடைக்குப் பிறகு கிடைக்கும் பொருட்களில் மண், கற்கள், பாதிக்கப்பட்ட பழங்கள், நோய்வாய்ப்பட்ட விளைச்சல் என்பன கலந்திருக்கலாம். இவற்றை அகற்றாமல் சந்தைக்கு அனுப்புவது விற்பனை விலையில் குறைவடையும். துர்நாற்றம் மற்றும் fungal (பூஞ்சை) பரவுவதையும் அதிகரிக்கும். அதனால் grading,sorting, washing & curing (வெங்காயம், வள்ளிக்கு) அவசியமாகின்றது. ஒவ்வொரு பயிருக்கும் தனித்தனி தரநிர்ணய நெறிமுறைகள் இருப்பதால் அவற்றை பின்பற்றுவதே சந்தைப் போட்டியில் விவசாயியை நிலைநிறுத்தும் முக்கிய அம்சமாகின்றது.



குளிர்வித்தல், ஆயுட்காலத்தை (shelf life) ஐ நீடிக்கும் சிறந்த முறை. காய்கறிகள், பழங்கள் போன்றவை சீக்கிரம் கெடக்கூடியவையாக இருப்பதால் அறுவடை செய்யும் தருணத்தில் Pre cooling செய்வது சிறந்ததாகும். இது respiration rate, நொதிய செயற்பாட்டை மந்தப்படுத்தி நுண்ணங்கிகளின் தொற்றுக்களை தடுக்கும். இந்த வசதி இல்லாத விவசாயிகள் நேரடியாக நிழலில் வைத்து குளிர் காற்றோட்டத்தை வழங்குவது கூட சிறந்த மாற்றுத் தீர்வாகும்.

பொதியிடும் முறை காய்கள், பழங்களை பொறுத்து பயன்படுத்தும் பைகள், பெட்டிகள், கலன்கள் ஆகியவை அவற்றின் ஆயுள் காலத்திலும் சந்தை விலையிலும் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. பொதி செய்யப்பயன்படும் பொருட்கள் ventilation holes, cushioning, materials, சுத்தமான கிருமியழிக்கப்பட்ட, handling friendly crates போன்றவை mechanical injury ஏற்படாமல் தடுக்கின்றது. பயிர்களின் விளைவுகள் சந்தை அடையும் வரை ஏற்படும் வெப்பநிலை மாறுபாடே அதிக இழப்பை ஏற்படுத்துகின்றது. அதனால் அறுவடையிலிருந்து நுகர்வோரை சென்றடையும் வரை வெப்ப நிலையை ஒரே போல பராமரிக்க வேண்டும். இதற்காக குளிர்சாதன வாகனங்கள், insulated box, controlled atmosphere storage என்பன பயன்படுத்தலாம். அறுவடையின் பின் பூஞ்சை, பக்றீரியாக்களினால் அதிகளவு நோய்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக Anthracnose, softrot, fusarium rot, black spot இவற்றை தடுக்க hot water treat ment, uv – c treatment, bio control agents அத்துடன் edible coating போன்றவற்றை பயன்படுத்தலாம்.

சேமிப்பு என்பது பின் அறுவடை மேலாண்மையின் மிக முக்கிய கட்டமாகும். பயிர்கள் அறுவடை செய்யப்பட்ட பின் அவற்றின் தரம் குறையாமல் நீண்ட கால பயன்படுத்தக்க நிலையில் பாதுகாப்பது சேமிப்பு முறையின் முதன்மை நோக்கமாகும் பயிர்கள் அறுவடை செய்யப்பட்ட தருணத்திலிருந்து அவை உயிருள்ள திசுக்களாக தொடர்ந்து சுவாசிக்கின்றன. இதனால் வெப்பநிலை, ஈரப்பதன், காற்றிலுள்ள வாயுக்கள் நேரடியாக பாதிக்கின்றன. எனவே சரியான வெப்பநிலை, ஈரப்பதன், காற்றோட்டம் மற்றும் வெளிச்சக்கட்டுப்பாடு ஆகியவை இருப்பது சிறந்த சேமிப்புக்கான நிபந்தனையாகும். குறைந்த வெப்பநிலை அனுசேப வீதத்தைக் (metabolic rate) குறைத்து அழுகலை / பழுதடைவதை தாமதப்படுத்துகிறது. அதே போல் சரியான சார்பு ஈரப்பதன் (relative humidity) நீரிழப்பை தடுக்கும். அதிக ஈரப்பதன் பூஞ்சை வளர்ச்சியை அதிகரிக்க கூடும். குறைந்த ஈரப்பதன் காய்கறிகளை சுருங்கச் செய்யும். மேலும் சரியான காற்றோட்டம் இல்லையெனில் $CO_2$ மற்றும் எதலின் சேர்ந்து பழங்கள் விரைவில் முற்றுவதற்கு வழிவகுக்கும்.

பயிர்களின் தன்மையைப் பொறுத்து பல்வேறு சேமிப்பு முறைகள் பயன்படுத்தப்படுகின்றது. பழங்கள், காய்கறிகள் பெரும்பாலும் குளிர் சேமிப்பில் வைக்கப்படும். இது வெப்ப நிலை, ஈரப்பதனை கட்டுப்படுத்துவதால் Shelf life ஐ பலமடங்கு அதிகரிக்கிறது. தானியங்கள் மற்றும் pulses போன்றவை உலர் சேமிப்பில் வைக்கப்படுகிறது. இதில் ஈரப்பதன் குறைப்பட்டதால் பூச்சியின் தாக்கம் குறைகிறது.

பண்ணையிலிருந்து நுகர்வோரை அடையும் வரையும் சரியான போக்குவரத்து முறை பயன்படுத்தப்படாவிட்டால் அடிபடுதல், அழுத்தம் வெப்பநிலை உயர்வு, காற்றோட்டமின்மை போன்ற காரணங்களால் பெரிய அளவில் இழப்பு ஏற்படுகின்றன. Refrigerated trucks & ventilation உள்ள வாகனங்கள் பயன்படுத்தல், அதிகளவு பொருட்களை ஏற்றாமல் இருத்தல், மெதுவாக கையாளுதல் என்பன இழப்பை குறைக்கும்.

எனவே பின் அறுவடை மேலாண்மை என்பது விவசாயியின் உழைப்பையும், உணவின் தரத்தையும், நாட்டின் உணவுப் பாதுகாப்பையும் பாதுகாக்கும் முக்கிய அறிவியல் நடைமுறை ஆகும். அறுவடை, வகைப்பாடு, சுத்தப்படுத்தல், Packaging, சேமிப்பு, போக்குவரத்து மற்றும் நவீன தொழில்நுட்பங்களை சரியாக பின்பற்றுவதன் மூலம் shelf life அதிகரித்து தரம் பாதுகாக்கப்படும். இதனால் பின் அறுவடை இழப்புக்கள் குறைந்து விவசாயியின் வருமானம் உயர்ந்து, நுகர்வோருக்கு தரமான சுத்தமான உணவு கிடைக்கின்றது. எனவே பின் அறுவடை மேலாண்மை என்பது தொழில்நுட்பமல்ல. உணவு பாதுகாப்பையும் பொருளாதாரத்தையும் உறுதிப்படுத்தும் முக்கிய தூணாகும்.

த.சாருஜா
பரிசோதனை செய்முறையாளர்
விஞ்ஞானபீடம்
யாழ் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வெனிசுலா...

வெனிசுலாவில் ஏற்பட்ட நில நடுக்கத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 589ஆக உயர்ந்துள்ளது.

இலங்கை நேரப்படி நேற்று முன்தினம் அதிகாலை 3 மணிக்கு ரிக்டர் அளவுகோலில் 7.2 மற்றும் 7.5 என இரு சக்திவாய்ந்த நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளன.

இதன்போது, ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்திருக்க வாய்ப்பு உள்ளதாக அச்சம் வெளியிடப்பட்டது.

இந்நிலையில், வெனிசுலா நில நடுக்கங்களில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 589 ஆக உயர்ந்துள்ளது.

அத்துடன், 2980க்கும் அதிக மானோர் காயம் அடைந்துள்ளனர். (ம-7)

மஹஜன சம்பத
திகதி 2026.06.26
சீட்டிழுப்பு இலக்கம் 6230
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
G 2 7 6 1 9 6
அத சம்பத
G 6 1 9 6
சீட்டிழுப்பு இலக்கம் 0805

சுப தவசக்
திகதி 2026.06.26
சீட்டிழுப்பு இலக்கம் 8348
மகரம் 10 38 40
8602

தன நிதானய
திகதி - 2026.06.26
சீட்டிழுப்பு இலக்கம் - 2260
W 17 46 72 79 W

மெகா பவர்
திகதி 26/06/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2578
U 04 49 50 55 70

NLB ஜய
திகதி 2026.06.26
சீட்டிழுப்பு இலக்கம் 0498
I 5 9 9 3

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4472
சீட்டிழுப்பு திகதி | 26.06.2026
D 13 29 61 71

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.06.26
சீட்டிழுப்பு இலக்கம் 1539
தனுசு 10 14 21 29 தனுசு

## இழைக்கப்பட்ட...

உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையை சபையில் விமர்சித்து, அதனைத் தூக்கி வீசிய குற்றத்தில், நகர சபை உப தவிசாளர் ஞா. கிஷோரை வடமாகாண ஆளுநர், உப தவிசாளரின் பதவியை நீக்கியும், நகர சபை உறுப்புரிமையை வறிதாக்கியும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தால் சாவகச்சேரியில் 700க்கும் மேற்பட்ட கடைகளை மூட வேண்டியதாக இருக்கும்.

கடந்த காலங்களில் உள்ளூராட்சி சபைகளினால் கட்டட அனுமதிகள் வழங்குவதில் கால தாமதங்கள் ஏற்பட்டன. அதனை நாம் தற்போது சீர் செய்துள்ளோம்.

புதிய வர்த்தக நிலையங்களை கட்டி, வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களிடம் குடிபுகு சான்றிதழ் கட்டாயம் என்பதனை வலியுறுத்தி, குடிபுகு சான்றிதழ்களைப் பெற வைத்துள்ளோம்.

ஆனால் நகர சபைக் கட்டடங்களில் உள்ள வர்த்தக நிலையங்கள் உட்பட சில வர்த்தக நிலையக் கட்டடங்கள் 50 ஆண்டுகளுக்கு மேலானது. அவற்றுக்கு குடிபுகு சான்றிதழ் பெறுவதில் பல சிக்கல்கள் உண்டு. உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையை அவ்வாறே பின்பற்றினால் பல வர்த்தக நிலையங்களை மூட வேண்டி வரும். அதனால் அது தொடர்பில் சபையில் பேசினேன்.

அண்மையில் சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் தங்குமிடம் கட்டப்பட்டு திறக்கப்பட்டது. அதற்கு எந்த சபையில் அனுமதி பெற்றனர். இராணுவத்தினர் முகாம்களுக்குள் கட்டட வேலைகளைச் செய்கின்றார்கள். அவர்களுக்கு யார் அனுமதி கொடுத்தது? அது மட்டுமன்றி சாவகச்சேரியில் பல அரச கட்டடங்களுக்கே உரிய அனுமதிகள் இல்லாத நிலைமைகள் காணப்படுகிறது.

இவ்வாறான நிலையில், வர்த்தக நிலையங்களை முடக்கும் செயற்பாடாக அனுமதி விடயங்களை இறுக்கமாகப் பின்பற்ற முயல்கின்றனர்.

நான் பதவிக்காக வரவில்லை. என் பதவி பறிபோனதால் அஞ்சி ஒதுங்கவும் இல்லை. எனக்கான நீதியைக் கோரி நான் நீதிமன்றம் செல்வேன். நீதித்துறை மீது எனக்கு நம்பிக்கை உண்டு. எனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்காக நீதிமன்றம் செல்லவுள்ளேன் எனத் தெரிவித்தார். (ம-7,30)

## 232 சந்தேகநபர்...

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

வெளிநாடுகளில் பதுங்கியிருக்கும் 37 பேர் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளாக இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர்களைக் கைது செய்து இலங்கைக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கடந்த 20 மாத காலப்பகுதியில் சிவப்பு அறிவித்தல்கள் மூலம் 23 ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளதாகவும் சிவப்பு அறிவித்தல் இல்லாமலேயே மேலும் 35 பேர் அழைத்து வரப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார். அதன்படி, இதுவரை 58 பேர் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு மேலதிகமாக, சிவப்பு அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ள மேலும் 96 ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள் வெளிநாடுகளில் பதுங்கியிருப்பதாகவும் ஐக்கிய அரபு இராச்சியம், இந்தியா, மலேசியா, ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், கனடா, ரஷ்யா, இத்தாலி மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுகளில் இவர்கள் இருப்பதாகவும் அமைச்சர் வெளிப்படுத்தினர். (ம-7)

நேற்று (26) கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகளாவிய பேரழிவாக உருவெடுத்துள்ள போதைப்பொருள் பாவனை மற்றும் கடத்தல் என்பவற்றை எமது நாட்டிற்கு எதிரான ஒரு பாரிய அச்சுறுத்தலாக நாம் அடையாளப்படுத்தியுள்ளோம். ஒரு சமூகமாக இந்த அழிவை நோக்கி நாம் இனி மேலும் ஒரு அங்குலம் கூட நகரக் கூடாது.

எத்தகைய சவால்கள் வந்தாலும், இந்தப் பயணத்தைப் பின்னோக்கி மாற்ற நாம் தயாரில்லை. கடந்த காலங்களில் போதைப்பொருளுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் போல இது வெறும் மேடை நாடகமாக அமையாது. இந்த மண்ணையும் எதிர்காலச் சந்ததியினரையும் இந்தப் பேரழிவிலிருந்து மீட்பதற்கான யதார்த்தபூர்வமான வேலைத்திட்டத்தை நாம் தற்பொழுது முன்னெடுத்துள்ளோம் என்றார். (ம-7)

## மீன்பிடிக்கச்...

இளைஞனே உயிரிழந்தவராவார்.

தூண்டிலோடு மீன்பிடிக்கச் சென்றபோதே மேற்படி விபரீதம் இடம்பெற்றுள்ளது. (ம-7,299,315)

## கருத்துத்...

மன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அரசாங்கத்திற்கு எதிராகக் கருத்துத் தெரிவிப்பவர்களை ஊழல்வாதிகளாகவோ அல்லது துரோகிகளாகவோ சித்தரிக்கும் போக்குக் காணப்படுகின்றது.

அரசாங்கம் குறிப்பிட்ட சில நபர்களை மாத்திரம் இலக்கு வைத்து சட்டத்தை நடைமுறைப்படுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆளும் தரப்பினர் அரசாங்கத்தின் எதிர்ப்பாளர்களைத் தங்கள் எதிரிகளாகவே கருதுகின்றனர் என்றும் நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## போதைப்...

தேசிய போதைப் பொருள் ஒழிப்பு தேசிய தினத்தில்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பிரி தன சம்பத
26.06.2026 வெற்றி வாரம் 0938
ஆங்கில எழுத்து N வெற்றி இலக்கம் 6 0 6 7 0 8
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,485,703.60

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3204 25000 பணப் பரிசு 71707
சீட்டிழுப்பு திகதி 2026.06.26 தினம் வெள்ளிக்கிழமை
23 30 38 50 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,009,373.60

சனிதா
திகதி 26.06.2026 வெற்றி வாரம் 5365
32 60 65 80 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,220,115.60
26083

சசிரி
வெற்றி வாரம் 1034
சீட்டிழுப்பு திகதி 26.06.2026 வெள்ளிக்கிழமை
16 38 44
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,716,200.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4916
சீட்டிழுப்பு திகதி 26.06.2026 தினம் வெள்ளிக்கிழமை
38 49 59 60 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.7,014,822.00

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 16 04 15 36 39
2380
26.06.2026
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.303,021,717.00

அத கோடிபதி
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 3030
சீட்டிழுப்பு திகதி 2026.06.26
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.64,772,500.00
28 29 56 58 N

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8ம் ஆண்டு சிரார்த்த தின அஞ்சலி



## அமரர் செல்வராசா தயானந்தன்

மண்ணில் 05.02.1964
விண்ணில் 14.07.2019

திதி :
ஆனிமாத பூர்வபட்ஷ திரயோதசி

எங்கள் குலக் கொழுந்தே
உன் ஆன்மா சாந்தி அடைய
இறைவனை
வேண்டுகின்றோம்.

சந்தை வீதி,
உடுப்பிட்டி.

(C-5931)

உன் நினைவுடனே வாழும்
அன்பான ஐயா மற்றும்
பாசமுள்ள உறவுகள்


## எரிபொருள்...

வழங்கப்படும் என நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று (26) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். மேலும் உரையாற்றிய பிரதியமைச்சர்,.

எரிபொருளுக்காக அரசாங்கம் இதுவரை 57 பில்லியன் ரூபா மானியத்தை வழங்கியுள்ள நிலையில், இம் மாதத்துடன் அந்த மானியம் முடிவுக்கு வரவுள்ளது.

அந்த மானியத்தை மீண்டும் வழங்கலாமா? என்பது குறித்த கொள்கை முடிவு எடுக்கப்பட்டு பின்னர் அறிவிக்கப்படும்.

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழலால் எரிபொருள் விலைகள் வேகமாக உயர்ந்ததன் காரணமாக, அந்த விலைகளுடன் ஒப்பிடுகையில் இங்கும் எரிபொருள் விலைகளைச் சற்று உயர்த்த வேண்டிய கட்டாயம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டது.

அடுத்த இரண்டு மாதங்களுக்குத் தேவைப்படும் எரிபொருள் கடந்த மாதமே அதிக விலையில் கொள்முதல் கட்டளைகள் (ஆர்டர்) செய்யப்பட்டுள்ளது. புதிய எரிபொருள் கொள்முதல் கட்டளைகளை மேற்கொள்ளும் போது இந்தக் குறைந்த விலைகளின் பலனைப் பொது மக்களுக்கு வழங்க முடியும் என்றார். (ம-7)


## காணி விற்பனைக்கு

மாவிட்டபுரம், வாளித் தொழிற்சாலை வீதியில்4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

(7907)

தொடர்புக்கு
077 055 6787



## விற்பனைக்கு

- Computer Desktop Acer Intel - i7 - 8700 ~~120,000/=~~ 90,000/=
- Butterfly - wet கிறைண்டர் – 3 கல் உள்ளது ~~20,000/=~~ 10,000/=
- சிசில் டபுள்டோர் Fridge மிக நல்ல நிலை ~~35,000/=~~ 30,000/=
- P II, P III Desktop சிறிய திருத்தங்கள் செய்ய வேண்டியது U.P.S பற்றரி போட வேண்டியது. P II + P III - 10,000/= U.P.S - 3000/= (Each)

(INJECT Printer Free)

சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்.
காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை

தொடர்பு :
071 803 4182 உரும்பிராய்

(7919)



## பகிர்வதற்கு முன் சிந்தியுங்கள்

வதந்திகளும் அரசியல் நிகழ்ச்சிநிரல்களும் உங்களை பயன்படுத்த விடாதீர்கள். வெறுப்புப் பேச்சு பெரும்பாலும் வதந்திகள், தவறான தகவல்கள் மற்றும் சமூகங்களைப் பிரிக்க முயலும் அரசியல் நோக்கங்களால் இயக்கப்படுகிறது.

ஏதேனும் தகவலை பகிர்வதற்கு முன் உங்களையே கேளுங்கள்:
இதை யார் உருவாக்கினர்? ஏன் உருவாக்கினர்?
இதனால் யாருக்கு பயன்?

பொறுப்புடன் நடந்து கொள்ளுங்கள்.
அமைதியைத் தெரிவு செய்யுங்கள்.

இந்தத் தகவல் SOND அமைப்பினால் ஐ.நா இலங்கை மற்றும் UNICEF இலங்கையின் ஆதரவுடன் வழங்கப் படுகிறது.

(7775)



## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி நின்று பணி புரிவதற்கு பெண் ஒருவர் உடனடியாகத் தேவை.

தொடர்புகளுக்கு :
077 217 3113

(2454)



## கடை அல்லது காணி வாடகைக்கு தேவை

பலாலி வீதியில் உரும்பிராய் சந்திக்கும் யாழ்.வேம்படிச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் வியாபாரம் செய்வதற்கு பொருத்தமான கடை அல்லது காணி வாடகைக்கு தேவை

(7918)

தொடர்புக்கு
076 197 4136



# காணி விற்பனைக்கு

## யாழ்ப்பாணம் ஊரெழு கிழக்குப் பகுதியில் 18 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

## நிலப்பரப்பு

- பலாலி பிரதான வீதியில் இருந்து 150m தூரத்தில் உள்ளது.
- 18 அடிப் பாதையுடன்.
- 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நன்னீர் ஊற்று சூழல்.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- ஒரு பரப்பின் விலை 55 இலட்சம் ரூபாய்.
- பார்வையிடும் நேரம் :

காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை

(7932)

தொடர்புகளுக்கு : ஜெயம்
077 814 7389
077 986 5457
Jeyam.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.